பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 26 புதன்கிழமை (09.05.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 163

# வெளிநாடுகள் தமது தீர்வுகளை இலங்கை மீது திணிக்கமுடியாது

## அவை அவசியமற்றவை என்கிறார் ஜனாதிபதி



கொழும்பு, மே 9

இலங்கைப் பிரச்சினைக்கு வெளிநாடுகள் எந்தத் தீர்வையும் திணிக்க முடியாது. சர்வதேசத்தினால் திணிக்கப்படும் தீர்வுகள் எமக்கு அவசியமற்றவை. நாட்டையும் மக்களையும் காப்பாற்ற வேண்டியது அரசின் பொறுப்பு.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் வைத்து அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

ஜனாதிபதி தமது பேச்சில் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை மக்கள் இரத்தம் சிந்தியது போதும்; அவர்கள் பலவகைகளாலும் பாதிக்கப்பட்டதும் போதும். இந்தப் பிரச்சினையை முடிவுக்குக்கொண்டுவந்தாக வேண்டும்.

அதற்காக எமது நாட்டுக்குள்ளேயே தீர்வு கண்டறியப்பட வேண்டும். வெளிநாடுகள் திணிக்கும் தீர்வு அவசியமற்றது.

அரசியல் நோக்கத்துக்கு அமைய படையினர் பயங்கரவாதிகளுக்கு எதிராகப் போராடவில்லை.

படையினரின் நம்பிக்கையை வலுவூட்டுவதற்கு அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது. ஆகையால் பயங்கரவாதிகளின் சூழ்ச்சிகளுக்குள் சிக்கிவிடாமல் நம்பிக்கையுடன் செயலாற்றவேண்டும் என்று நாட்டு மக்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பயங்கரவாதத்திற்கு உரிய முறையில் தாம் பதில் அளிக்கின்றனர் என மக்கள் மத்தியில் இப்போது நம்பிக்கை உருவாகி உள்ளது.

இதேவேளை - எமது கட்சி அரசியல் தீர்வுயோசனை ஒன்றையும் முன்வைத்துள்ளது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் வான் தாக்குதல்

முல்லைத்தீவு, மே 9

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் விமானப்படையின் விமானங்கள் மக்கள் குடியிருப்புக்கள் மீது குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளன.

புதுக்குடியிருப்பு கர்ணன் குடியிருப்புப் பகுதி மீது நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இரு மிக்-27 ரக வானூர்திகள் குண்டுத் தாக்குதலை நடத்தின.

இதில் ஏழு பிள்ளைகளின் தாயாரான கர்ணன் குடியிருப்பைச் சேர்ந்த மாரிமுத்து கனகம்மா என்பவர் காயமடைந்துள்ளார்.

தாக்குதலில் குடியிருப்புக்கள் உட்பட பயன்தரு மரங்கள் சேதமடைந்துள்ளன.

## இலங்கைக்கு ஏழு மில்லியன் பவுண்ட்ஸ் ஆயுத உதவியை பிரிட்டன் வழங்குகிறது

### அதைப்பற்றி எவரும் கூச்சலிடவில்லையே என்கிறார் சுரேஷ்



கொழும்பு, மே 9

இலங்கைக்கு ஏழு மில்லியன் பவுண்ட்ஸ் பெறுமதி வாய்ந்த ஆயுதங்கள் மற்றும் யுத்த தளபாடங்கள் போன்றவற்றை வழங்க பிரிட்டிஷ் நாடாளுமன்றில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இலங்கைப் பிரச்சினைபற்றி ஆராய்வது தொடர்பாக பிரிட்டிஷ் நாடாளுமன்றம் தீர்மானம் எடுத்தமைபற்றி நேற்று நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்புவேளை இடம்பெற்ற பிரேரணை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கைப் பிரச்சினையை ஆராய்வதற்கு பிரிட்டன் நாடாளுமன்றம் தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளது. இது இலங்கையின் இறைமையை மீறும் செயல் என்று சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் சொல்கின்றனர். ஆனால் இந்தியா, சீனாவிற்கு ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய இலங்கை முயலும்போது இவர்கள் மௌனமாகவுள்ளனர். சமாதானத்தைப் பற்றி இந்நாடுகள் பேசினால் அது இறைமையை மீறும் செயல் என்று கூக்குரலிடுகின்றனர்.

இலங்கைப்பிரச்சினையில் தலையிடுவதெனத் தீர்மானம்எடுக்கப்பட்ட அதே பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் 7 மில்லியன் பவுண்ட்ஸ் பெறுமதிவாய்ந்த ஆயுதங்களை இலங்கைக்கு வழங்குவதெனவும் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது. இதைப் பற்றி யாரும் பேசவில்லை.

இங்கு உரையாற்றிய நாடாளுமன்ற (08 ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடிப்படை அதிகாரி களுவாஞ்சிக்குடியில் பலி

மட்டக்களப்பு, மே 9

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி தளவாய் பகுதியில் நேற்றுமாலை 4 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய மோட்டார்த் தாக்குதலில் விசேட அதிரடிப்படை அதிகாரி ஒருவர் உயிரிழந்தார்.

இவரது சடலம் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் படையினரிடம் கையளிக்கப்பட்டது.

## அமெரிக்க இராஜாங்க அமைச்சர் இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்

### நேற்றிரவு வெளிவிவகார அமைச்சருடன் பேச்சு



கொழும்பு, மே 9

இலங்கைக்கு மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு நேற்று கொழும்பு வந்து சேர்ந்த மத்திய மற்றும் தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்க அமைச்சர் றிச்சர்ட் பௌச்சர் இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

சமய மற்றும் மக்கள் பிரதிநிதிகளையும், அரச உயர் அதிகாரிகளையும் அவர் சந்தித்து, குடாநாட்டின் நிலைமை குறித்து கலந்துரையாடுவார் என்று தெரியவந்துள்ளது.

அவர் நேற்றிரவு வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகமவைச் சந்தித்து சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள தேக்க நிலை குறித்துக் கலந்துரையாடினார். நாளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச்சந்திக்கும்அவர் அன்று செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்துவார். (அ-1)

## விமானப்படைத் தலைமையகம் ஹிங்குராகொடவுக்கு மாறும்?

கொழும்பு, மே 9

கட்டுநாயக்காவில் அமைந்துள்ள இலங்கை விமானப்படையின் தலைமையகம் ஹிங்குராகொடவுக்கு மாற்றப்படவிருப்பதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

கட்டுநாயக்காவில் சர்வதேச விமான நிலையத்திற்கு அருகில் விமானப்படையினரின் தளம் அமைந்திருப்பதால் விடுதலைப் புலிகளின் வான்தாக்குதல் விமானத்தளம் மீது மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் பயணிகள் விமான நிலையத்தின் பணிகளுக்கும் பாதிப்பு ஏற்படும் என்பதால் விமானப்படைத்தளத்தை வேறு இடத்துக்கு மாற்றவேண்டிய தேவை அரசுக்கு ஏற்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

இதனையடுத்தே அந்த விமானத்தளத்தை ஹிங்குராகொடவுக்கு மாற்றுவதற்கு ஆலோசிக்கப்பட்டு வருவதாக தகவல் வெளியாகியது. எனினும் இது தொடர்பாக அரசுத்தரப்பிலிருந்து உத்தியோக பூர்வமான அறிவிப்புக்கள் எவையும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

## புதுவையில் நாளை பேரணி

பிரான்ஸில் ஈழத்தமிழர் பிரதிநிதிகள் கைதுசெய்யப்பட்டதைக் கண்டித்து தமிழகத்தின் புதுவை மாநிலத்தின் 38 அமைப்புகள் இணைந்து நாளை பெரும் கண்டனப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளன.

பாட்டாளி மக்கள் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள், ம.தி.மு.க. உட்பட 38 கட்சிகள், இயக்கங்கள் இணைந்து இந்தப் பேரணியை ஏற்பாடு செய்துள்ளன. (சி)

## பிரிட்டனின் தலையீட்டுக்கு எதிராக மக்களைத் திரட்டி ஜே.வி.பி. போராடும்!

### நாடாளுமன்றத்தில் வீரவன்ஸ ஆவேசம்



கொழும்பு, மே 9

இலங்கையின் உள் விவகாரத்தில் தலையிடுகின்ற உரிமை - அதிகாரம் - பிரிட்டனுக்குக் கிடையாது. நாட்டைப் புலிகளுக்குப் பிரித்துக் கொடுக்கும் - காலனித்துவ ஆட்சியை இங்கு மீண்டும்நிலைநாட்டும்- வளங்களைச்சுரண்டும் - திட்டத்துடனேயே பிரிட்டன் எமது நாட்டின் உள்விவகாரத்தில் தலையிட முற்படுகிறது.

பிரிட்டனின் இத்திட்டத்தை உடனடியாக நிறுத்துவது மாத்திரமின்றி இலங்கை பிரிட்டனின் காலனித்துவ ஆட்சியில் இருந்தபோது பிரிட்டனால் இலங்கைக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்காக பிரிட்டன் இலங்கையிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

பிரிட்டனின் சதித்திட்டத்தை முறியடிக்க ஜே. வி. பி. மக்களை ஒன்றுதிரட்டிப் பாரிய போராட்டங்களை நடத்தும்.

- இவ்வாறு ஜே. வி. பி. நாடாளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்ஸ நேற்று நாடாளுமன்றில் ஆவேசமாக உரையாற்றினார்.

இலங்கை விவகாரத்தில் தலையிடுவ[illegible]தென பிரிட்டன் நாடாளுமன்றம் எடுத்த தீர்மானம் தொடர்பாக நேற்று விமல் வீரவன்ஸ சபையில், சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்து உரையாற்றினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

எமது நாட்டின் உள்விவகாரத்தில் தலையிடுவதற்கு பிரிட்டன் நாடாளுமன்றம் தீர்மானம் எடுத்துள்ளது. இது எமது நாட்டின் இறைமையை மீறும் செயல்;

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாந்தோட்டையில் வெடிகுண்டு மீட்பு

கொழும்பு, மே 9

அம்பாந்தோட்டை - பகலஹந்தரப் பகுதியிலுள்ள வீடு ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த குண்டு ஒன்றைப் பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை தமக்குக்

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நள்ளிரவுக் கைதுகளால்

# யாழ். மாணவர்களிடையே பதற்றம் கல்விச் செயற்பாடுகளும் பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 09

யாழ். பாடசாலைகளின் உயர்தர வகுப்பு மாணவர்கள் நால்வர், கடந்த வெள்ளியிரவு அவர்களது வீடுகளில் இருந்து ஆயுத தாரிகளால் விசாரணை என்ற பெயரில் அழைத்துச் செல்லப்பட்டமை யாழ். கல்விச் சமூகத்தில் பெரும் பதற்றத்தையும் குழப் பத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

இதேசமயம் யாழ். பல்கலைக்கழகத் துக்குள் அதே வெள்ளி இரவு, காவலர்களைத் தாக்கிவிட்டு ஆயுதக் கும்பல் ஒன்று உள்ளே நுழைந்து தேடுதலை நடத்தியதோடு, மாணவர் பொது அறையில் மாணவர் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த அஞ்சலி மையம் சேதப் படுத்தப்பட்டமையும் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நடவடிக்கைகளை அடுத்து கடந்த இரண்டு நாட்களாக யாழ். பல்கலைக்கழக மாண வர்கள் மற்றும் உயர் தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்கள் விரிவுரைகளைப் பகிஷ்கரித் திருக்கின்றார்கள்.

பல பாடசாலைகளில் மாணவர் வரவு வெகுவாகக் குறைந்திருந்தது.

கைதான மாணவர்களின் விடுவிப்புக்கு வேண்டுகோள் விடுத் துத் தமிழர் தாயகம் எங்கும் கல்விச் செயற் பாட்டுப் பகிஷ்கரிப் புக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைப்பு விடுக்கும் ஏதுநிலை தோன்றியிருப்ப தாக கூட்டமைப்பு வட் டாரங்கள் தெரிவித் துள்ளன.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தம்பிஜயா மகேந்திரம்



புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிட மாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிஜயா மகேந்திரம் நேற்று (08.05.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முன்னாள் வர்த்தகர் (பாணந்துறை) தம்பிஜயாவின் (செட்டியார்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - செல்லம்மா தம்பதியரின் அருமை மகளும் காலஞ் சென்றவர்களான சம்பந்தர் - கைராசிப்பிள்ளை தம் பதியரின் மருமகளும் வயித்திலிங்கம் (உரிமையாளர் - கண்ணன் லொட்ஜ், பரமேஸ்வராச் சந்தி), காலஞ்சென்ற சத்திய ரூபவதி மற்றும் தர்மாம்பிகை (லண்டன்) ஆகியோரின் அருமைத் தாயும் பரமேஸ் வரி, காலஞ்சென்ற சச்சிதானந்தம் மற்றும் திருச்செல்வம் (லண்டன்) ஆகி யோரின் பாசமிகு மாமியும் காலஞ்சென்றவர்களான நாகாத்தைப்பிள்ளை, சிதம்பரப்பிள்ளை, மரகதம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற பகீர தன், சாந்தி ரவிகரன் (பிரான்ஸ்), சதீஸ்குமார் - சசிமாலா (கனடா), லோக குமார் - கயல்விழி, தயாழினி - கருண், அருண் (லண்டன்) ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2007) புதன்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கொக்கு வில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

*"ஸ்ரீ கிருஷ்ணா",*
*129/1, பலாலி வீதி,*
*திருநெல்வேலி. தொ.பே. 222 6466.*

தகவல்:
த. வயித்திலிங்கம் (மகன்).
(60430)

### கந்தையா செல்வராசா

தாவடியைப் பிறப்பிடமாகவும் ஏழாலையை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா செல்வராசா 07.05.2007 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பூரணம் தம்பதியரின் அன்பு மகனும் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சரவண முத்து - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சதானந்தன் (ஜேர்மனி), செல்வறஜனி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெந்தி (ஜேர்மனி), காலஞ்சென்ற தபேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனும் கீர்த்திகா, நிவே திகா (கனடா), கிரிஜன், அக்ஷயன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08.05.2007) செவ்வாய்க் கிழமை அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனஞ்செய்யப்பட் டது.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மயிலங்காடு,*
*ஏழாலை தெற்கு, ஏழாலை.*

தகவல்:
தங்கரத்தினம் (மனைவி).

### திருமதி அரியமணி நவரத்தினம்

சாவகச்சேரி, நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அரியமணி நவரத்தினம் நேற்று (08.05.2007) செவ்வாய்க் கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் கந்தையா சொலொமன் நவரத்தினம் அவர்களின் பாசமிகு மனைவியும், எபெனேசர் சாந்தரூபனின் (எபி) பாசமிகு தாயும், காலஞ் சென்ற த.சுவாமிநாதன், அரியநாயகம் சுவாமிநாதன் ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பாலச்சந்திரன், சந்திரமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கந்தையா இராசமந்திரியின் மைத்துனியும் திருமதி ஸ்ரீ ஜெயனி பூபாலசிங் கம், ஜெயரூபன் ஆகியோரின் அக்கம்மாவுமாவார்.

நல்லடக்க ஆராதனைகள் அவரின் நுணாவில் இல்லத்தில் இன்று (09.05.2007) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று மட்டுவில் கல்லறையில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நுணாவில் மேற்கு,*
*சாவகச்சேரி.*

தகவல்:
க. சொ. நவரத்தினம் (கணவர் - முன்னாள் எழுதுவினைஞர் பிரதேச செயலகம் சாவகச்சேரி).

### அப்புத்துரை அருமைத்துரை



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட அப்புத்துரை அருமைத்துரை நேற்று (08.05.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத் துரை - திரவியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - நல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் பாக் கியலஷ்மியின் அன்புக் கணவரும் சாந்தமலர் (சாந்தி), காலஞ்சென்ற சுதாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஐங்கரனின் (ஆசிரியர் யா/ மயிலணி சைவ மகா வித்தியாலயம், யா/ தாவடி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலை) அன்பு மாமனும் இரத்தினம் பிள்ளை, காலஞ்சென்ற புனிதவதி, ஆயிலியம், இராமநாதன் (கிளி. சுவிஸ்) அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற தியாகராசா மற்றும் சரஸ் வதி, நடராசா (பழமுதிர்ச்சோலை உரிமையாளர்), ஆனந்தராசா (லண்டன்) மனோரஞ்சிதம், றதிதேவி (யா/ இணுவில் இந்துக்கல்லூரி), இரா சேந்திரம், மகாராசா (மகேந்திரன்), இராசலஷ்சுமி, பவானி ஆகியோ ரின் மைத்துனரும், சின்னத்துரை, யோகேந்திரன், சிவகுமாரன், ஜெக சோதி, சுந்தரேஸ்வரி, ஜீவகுமாரி ஆகியோரின் சகலனும் இயம்போத ரனின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2007) புதன் கிழமை அவரின் இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முத்தட்டி மடத்தடி,*
*கே.கே.எஸ். வீதி,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.*

தகவல்:
மனைவி, மகள், மருமகன், சகோதரர்கள்.
(60438)

## சமய சந்நிதிகளில்

கைதடி, மே 9

தெல்லிப்பழை காசி விநாயகர் ஆலய வருடாந்த பெரும் திருவிழா கடந்த 2ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடை பெற்று வருகின்றது.

இன்று புதன் கிழமை மாலை 4 மணிக்கு சப்பரத் திருவிழாவும் நாளை வியாழக் கிழமை காலை 9 மணிக்குத் தேர்த் திரு விழாவும் மறு நாள் வெள்ளிக் கிழமை தீர்த்தத்திரு விழாவும் இடம் பெறவுள்ளன.

(1-203-75)

* * *

வடமராட்சி, மே 9

அல்வாய் வேவி லந்தை முத்துமாரி அம்மன் ஆலய வரு டாந்த மகா கும்பாபி சேகதின் மகா சங் காபிசேகமும் பாற் குடபவனியும் எதிர் வரும் 29ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளன.

அன்றைய தினம் குமிழடி விநாயகர் ஆலயத்தில் இருந்து பாற்குடபவனி இடம் பெறும். (203-173)

## நாய்களுக்குத் தடுப்பூசி

நவாலி, மே 9

ஆனைக்கோட்டை ஜே/133, சுதுமலை ஜே/132 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் கடந்த 7ஆம் திகதி முதல் மூன்று நாள்களுக்கு வளர்ப்பு நாய்களுக் கான விசர் நாய்க்கடி தடுப்பூசி மருந்து ஆனைக்கோட்டை பொதுச் சுகாதார பரி சோதகரினால் ஏற் றப்பட்டு வருகின் றது.

இதற்காக நாய் ஒன்றுக்கு 20 ரூபா வீதம் இப்பகுதி உள் ளூராட்சி சபையின ரால் அறவிடப்பட்டு வருகின்றது.

மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி
அரியாலை ஸ்ரீ கலைமகள் விளையாட்டுக் கழகம் நடத் தும் 9 பேர்கொண்ட 12 ஓவர் மென்பந்து கிறிக்கெட் சுற்றுப்போட்டி.
* விண்ணப்ப முடிவு திகதி: 18.05.2007
* விண்ணப்பப் படிவம் பெற்றுக்கொள்ளும் இடங்கள்:
* நியூ லக்கி ஹாட்வெயர் (ஸ்ரான்லிக் கல்லூரி முன்பாக)
* வெலா சலூன் (கல்வியங்காடு)
* அரியாலை ஸ்ரீ கலைமகள் [illegible] சமூக நிலையம்.
[illegible] கழகம்.

# தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை இராணுவம் அவமானப்படுத்துகின்றது

## சபையில் பத்மினி சிதம்பரநாதன்

கொழும்பு, மே 09

உயர்மட்ட உத்தரவு என்ற பெயரில் இலங்கை இராணுவம் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் களை அவமானப்படுத்துகிறது. நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளுக்கும் குந் தகம் விளைவிக்கின்றது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் நேற்று நாடாளுமன் றத்தில் இவ்வாறு குற்றஞ்சாட்டினார்.

சபாநாயகர் டபிள்யூ. ஜே. எம். லொக்குபண் டார தலைமையில் நாடாளுமன்றம் கூடிய போது யாழ். மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் தனது சிறப்புரிமைக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத் தல்கள் தொடர்பாக பிரச்சினை ஒன்றை சபை யில் சமர்ப்பித்தார்.

அங்கு அவர் குறிப்பிட்டதாவது:-

கடந்த ஏப்ரல் 23ஆம் திகதியில் இருந்து ஓமந்தை ஊடாக கொழும்புக்கு வந்தபோது இராணுவத்தினர் மூன்று இடங்களில் எனது வாகனத்தை வழிமறித்து சோதனையிட்டதுடன் ஒருநாடாளுமன்ற உறுப்பினர் என்றும் பாராமல் என்னை அவமானப்படுத்தினர்.

முதலாவதாக ஓமந்தை சோதனைச் சாவடி யில் எனது வாகனம் நிறுத்தப்பட்டு கடுமை யான சோதனைக்குள்ளாக்கப்பட்டது. அப் போது அரசினால் எனக்கு வழங்கப்பட்ட பாது காப்பு உத்தியோகத்தர்களும் உடன் இருந்த னர்.

இரண்டாவதாக தம்புள்ளயில் வழிமறித்து கடுமையாக சோதனையிட்டனர். சீருடையில் இருந்த எனது பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தம்மை அடையாளம் காட்டிக்கொண்டு, ஓமந்தை சோதனைச் சாவடியில் இந்த வாக னம் சோதனையிடப்பட்டது என்றும், உடன் இருப்பவர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்றும் கூறினர்.

ஆனால் இராணுவத்தினரோ எதனையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

### உயர்மட்ட உத்தரவு என்றனர்

மூன்றாவது தடவையாக எனது வாகனம் அளவ்வையில் மறித்து சோதனை இடப் பட்டது.

நான் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர். அது வும் ஒரு பெண். ஏன் இப்படி அவமானப் படுத்துகின்றீர்கள் என்று கேட்டபோது, அங்கு கடமையில் இருந்த உப பொலிஸ் அதிகாரியான ஆரியரத்ன என்பவர் எங்களால் எதுவும் செய்ய முடியாது. உயர் மட்டத்தில் இருந்து கிடைத்த உத்தரவின் பேரிலேயே செயற்படு கிறோம். - என்று கூறினார்.

அப்படியானால் தமிழ் நாடாளுமன்ற உறுப் பினர்கள் திட்டமிட்டு அவமானப்படுத்தப் படுகின்றனரா? எங்களுடைய தனிமனித கௌர வத்துக்கு மட்டுமல்லாமல் சிறப்புரிமை களுக்கும் வேட்டு வைக்கின்றனர். எனவே சபாநாயகர் இவ்விடயத்தில் உரிய கவனம் செலுத்தி நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப் புரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என பத்மினி சிதம்பர நாதன் எம். பி. கோரிக்கை விடுத்தார். (சி)

# வவுனியாவில் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் மரணம்

வவுனியா, மே 9

வவுனியா பண்டாரிக்குளம் அம்மன் கோவில் வீதியில் நேற்று இடம்பெற்ற துப் பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் ஒருவர் கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்டவர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் மீது தாக்குதல் நடத்த முயற்சித்த இருவரில் ஒருவரையே விரட்டிச் சென்று சுட்டுக் கொன்றனர் என்று பொலி ஸார் தெரிவித்திருக்கின்றனர். அடுத்தவர் தப்பிச் சென்றுவிட்டார் என்றும் தெரிவிக் கப்பட்டது.

கொல்லப்பட்டவரிடமிருந்து ரி - 56 ரக துப்பாக்கி, 'மைக்ரோ' பிஸ்டல், தற்கொலை அங்கி ஆகியன கைப்பற்றப்பட்டன என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார். (சி)

# தென்மராட்சியில் ஆசிரியர்களுக்கு சேவை முன் பயிற்சி

யாழ்ப்பாணம், மே 9

தென்மராட்சியில் கல்வி வலயத்தில் "நிக் கொட்" நிறுவனத்தினால் நடத்தப்படும் சேவை முன்பயிற்சியில் பங்குபற்றும் ஆசிரியர்களுக் கான மதிப்பீடுகள் எதிர்வரும் 12ஆம் திகதி தொடக்கம் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 12, 13ஆம் திகதிகளில் வாய் மொழி மூல ஆங்கிலமும், 14ஆம் திகதி தொடக் கம் 18ஆம் திகதி வரை கற்பித்தல் மதிப்பீடும், மே19ஆம் திகதி இறுதி எழுத் துப் பரீட்சையும் நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாய கம் அறிவித்துள்ளார்.

இப்பயிற்சிநெறியில் பங்குபற்றும் ஆசி ரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறு தினம் வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (1-207)

## தேசியக் கல்வியியல் கல்லூரிகளின்

# தகவல் தொழில்நுட்பப் பாடநெறிக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர்

யாழ்ப்பாணம், மே 9

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் தகவல் தொழில்நுட்பப் பாடநெறிக்கு விண்ணப்பித் தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணி முதல் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற வுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட வர்கள் அழைப்புக் கடிதங்களையும் ஏனைய விவரங்களையும் தேசிய கல்வியியற் கல் லூரியில் உடன் பெற்றுக் கொள்ளுமாறு பீடா திபதி எஸ்.கே.யோகநாதன் தெரிவித்தார்.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு 72பேர் அழைக் கப்பட்டுள்ளனர்.

அழைக்கப்பட்டோர் விவரம் வருமாறு:

சுபாசினி. ஐ (வல்வெட்டித்துறை), மேனகா. கே (வல்வெட்டி), அமிர்தவர்ஷினி.ஏ (அரி யாலை), காயத்திரி.எம் (ஏழாலை மேற்கு), சிவதர்சினி.கே (தம்பாலை), நிசாந்தினி.ஏ (துன்னாலை மேற்கு), என்.காண்டீபன் (கொக்கு வில்கிழக்கு), துளசி.ரி (மாதகல்), கலை மகள்.கே (நல்லூர்), அமிர்தினி.எஸ் (அரியாலை மேற்கு).

பி.விக்னராஜா (இளவாலை வடக்கு), சுமனா. எஸ் (கைதடி தெற்கு), தர்சினி.பி (யாழ்ப் பாணம்), சுபவீனா.கே (இணுவில் கிழக்கு), ஆர்.துஷ்யந்தன் (புலோலி வடக்கு), சயந்தா.ஜி (மட்டுவில் கிழக்கு), அகல்யா.கே (கரண வாய்கிழக்கு), சுதந்திரா.ஈ (பாசையூர்), லோகினி.பி (ஆனைக்கோட்டை), சோபிகா.பி (சுண்டுக் குளி).

சுவர்ணரேகா.பி (றாக்ம), சுதாதேவி.கே (அல்வாய் கிழக்கு), அபிராமி.பி (பொலி கண்டி), கிர்லியா.வி (குடத்தனை), லோகிதா.பி (குடத் தனை), துளசிகா.வை (யாழ்ப்பாணம்), துளசி காஜினி.எஸ் (இணுவில் மேற்கு), ஆர்.சசீலன் (சங்கத்தானை), கே.பிரசாந்தன் (நெல்லியடி), டி.தவலிங்கம் (சுன்னாகம்).

எஸ்.தில்லைமகாராஜன் (உடுவில்), எஸ். சதாமா (தாவடி), கணேஸ்வரி.எஸ் (கொக்கு வில்), ரேக்கா.வி (கல்வியங்காடு), பிரவீணா .ஆர் (உடுவில்), சிவாணந்தி.ரி (தொண்டைமா னாறு), ஜெயமாலினி.ரி (மீசாலை தெற்கு), சிவதீபா.எஸ் (விடத்தற்பளை), அனுசியா. பி (சுன்னாகம்), பி.பாலசூரியன் (கந்தர் மடம்).

மேகலா.ரி (மாதகல்), தேவகி.ரி (புலோலி தெற்கு), ஜி.கோகிலரமணன் (வட்டுக் கோட்டை), எஸ்.சிவகுமார் (கொழும்புத்துறை), பி.சுயந் தன் (இளவாலை தெற்கு), நிரஜா.கே (கர வெட்டிமேற்கு), தாரணி.கே (கொக்குவில் கிழக்கு), அனுஷா.ஆர் (சுழிபுரம்), வனஜா.பி (மீசாலை தெற்கு), கே.லோகநாதன் (கந்தர்மடம்).

வானதி.எஸ் (ஏழாலை மேற்கு), சுதர்சினி. ஜே (நவாலி தெற்கு), நிரு ஜினி.ரி (நாவற் குழி), தயாநிதி.என் (நீராவியடி), தயாளினி.பி (திரு நெல்வேலி), தாட்சாயினி.பி (கந்தர்மடம்), சருண்யா.ரி (அளவெட்டி), ஜமிலா.ஆர் (ஏழாலை மேற்கு), அனித்தா.ஏ (ஆனைக்கோட்டை), ரோகிணி.பி (புலோலி தெற்கு).

கஜந்தா.கே (யாழ்ப்பாணம்), குமுதா.ஏ (சாவகச்சேரி), பேரம்பலம்.கே (அரியாலை), எஸ்.சந்திரகாந் (அரியாலை), சிவப்பிரியா. எஸ் (கரவெட்டி மத்தி), கே.குலராஜ் (கண்டி), எஸ். ஞானக்குமரன் (கொக்குவில் கிழக்கு), என். பிரதீபன் (பொலிகண்டி), சியாமளா.ரி (தம்ப சிட்டி).

சங்கீதா.கே (அல்வாய் வடக்கு), தர் சிகா.வி (யாழ்ப்பாணம்).'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி. மேற்கு பிரதேச செயலக

# கலை, இலக்கியப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களின் விவரம்

சங்கானை,மே 9

தேசிய கலை, இலக்கியப் பெருவிழாவை ஒட்டி கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

***கட்டுரை - கனிஷ்ட பிரிவு:***

மோ. மைதிலி - வட்டு. மத்திய கல்லூரி வட்டுக்கோட்டை, ம. கீமா - வட்டு. இந்துக் கல்லூரி சித்தன்கேணி, சி. டினோதினி வட்டு. மத்திய கல்லூரி வட்டுக்கோட்டை.

***சிரேஷ்ட பிரிவு***

ஏ. தர்சினி - வட்டு. இந்து கல்லூரி சித்தன்கேணி, க. பிரசாளினி - வட்டு. இந்துக் கல்லூரி சித்தன்கேணி, க. மகீபன் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

***கவிதை - கனிஷ்ட பிரிவு***

க. லனிக்கா - வட்டு. மத்திய கல்லூரி வட்டுக்கோட்டை, ஜெ.கரிகாசன் - சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், ஆ. தயாபரன் - வட்டு. மத்திய கல்லூரி வட்டுக்கோட்டை, உ. கார்த்திபன் வெல்வில் அறநெறி பாடசாலை, சுழிபுரம் கிழக்கு.

***சிரேஷ்ட பிரிவு***

ப. ரதாயினி -. வட்டு. மத்திய கல்லூரி வட்டுக்கோட்டை, யோ. பகிஷ்ரா - யோகி கார்த்திகேசு அறநெறி பாடசாலை, சுழிபுரம், சி. டினோதினி - வட்டு. மத்திய கல்லூரி வட்டுக்கோட்டை.

***திறந்தபோட்டி***

நா. அகிலன், மூளாய் வீதி. வட்டுக்கோட்டை, செ. சிவசுப்பிரமணியம் - மூளாய் தெற்கு - சுழிபுரம், ஸ்ரீ. சோபிகா - மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.

***சிறுகதை - கனிஷ்ட பிரிவு***

செ. சசிகலா - வட்டு. இந்துக் கல்லூரி சித்தன்கேணி, கை. சுரேன் வட்டு. இந்துக் கல்லூரி சித்தன்கேணி, த. தவருபினி - வட்டு. இந்துக் கல்லூரி சித்தன்கேணி.

***சிரேஷ்ட பிரிவு***

செ. பாமினி வெல்வில் அறிநெறி பாடசாலை, சுழிபுரம் கிழக்கு, யனித்தா வெல்வில் அறநெறி பாடசாலை, சுழிபுரம் கிழக்கு, செ. துஷிகா கண்ணகி அம்மன் அறநெறி பாடசாலை. வட்டு. கிழக்கு.

***திறந்த போட்டி***

க. நல்லதம்பி - துனைவி, வட்டுக்கோட்டை, ந. குகபரன் - மாதர் சங்க வீதி, சித்தன்கேணி, வே. பஞ்சாட்சரவேல் - வட்டு. வடக்கு, வட்டுக்கோட்டை,

***திறந்த போட்டி - பாடல் எழுதல்***

திருமதி பொ. பாக்கியம் - சுழிபுரம், கிழக்கு, சுழிபுரம், செ. சிவசுப்பிரமணியம் - மூளாய் தெற்கு - சுழிபுரம், க. நல்லதம்பி - துனைவி. வட்டுக்கோட்டை. (202 - 29).

## முன்பள்ளிகளின் விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம்,மே 9

மட்டுவில் ,நாவற்குழி பிரதேச முன்பள்ளிகள் இணைந்து நடத்தும் குடும்பமட்ட விளையாட்டுப்போட்டிகள் எதிர்வரும்– 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நாவற்குழி மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

செல்வி தனா கந்தையா தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சிவலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் (முன்பள்ளி) க.பாக்கியராசா ஆகியோர் கலந்து கொள்வர். (202-207)

## நாளையே கப்பல் சேவை

யாழ்ப்பாணம்,மே 9

காங்கேசன்துறையிலிருந்து இன்று புதன்கிழமை நடைபெறவிருந்த கப்பல் சேவை நாளை வியாழக்கிழமையே நடைபெறும் என யாழ். அரச அதிபர் கே. கணேஷ் அறிவித்துள்ளார்.

இன்றைய தினம் பயணம் செய்வதற்கென அனுமதிச் சீட்டுக்களைப் பெற்றுக் கொண்ட பொது மக்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களை தமது பயணத்தை நாளை மேற்கொள்ளுமாறு அரச அதிபர் கேட்டுள்ளார். (202)

## பிறப்புச் சான்றிதழ் பிரதி எடுக்கும் பணியை தனியாரிடம் வழங்க முடிவு

யாழ்ப்பாணம், மே9

யாழ்ப்பாண காணி, மாவட்ட பதிவகத்தின் விவாக, பிறப்பு, இறப்பு சான்றிதழ்களும் காணி உறுதிப் பிரதிகளும் நிழற்பிரதி எடுக்கும் பணிகள் தனியாருக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பங்களைத் தனியாரிடமிருந்து யாழ். காணி மேலதிக மாவட்டப்பதிவாளர் கோரியுள்ளார்.

விண்ணப்பத்தை அலுவலக நேரத்தில் யாழ்.செயலகத்தில் இயங்கும் பதிவாளர் அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

# நவாலியில் 'பின்னடைவு' நோயால் கால் நடைகள் பெரும் பாதிப்பு

நவாலி,மே 9

நவாலிப் பிரதேசத்தில் கால்நடைகளுக்கு 'பின்னடைவு' என்னும் ஒருவித நோய் பரவி வருகின்றது. இதனால் கால்நடைகள் திடீர் திடீரென மரணமாகின்றன.

அண்மைக்காலமாக நவாலிப் பிரதேச கால்நடைகளுக்கு இந்த நோய் பரவிவருகின்றது. ஆடு, மாடு போன்றவற்றின் பின்னங்கால்கள் இரண்டும் இந்நோயால் பாதிக்கப்படுகின்றன. பாதிப்புறுபவை நிற்க முடியாமல் சோர்ந்து விழுகின்றன. இரண்டு, மூன்று நாள்களில் அவை இறந்தும் விடுகின்றன.

இந்நோயால் பெறுமதி மிக்க பல கால்நடைகள் உயிரிழப்பதாக கால்நடை வளர்ப்போர் கவலை தெரிவிக்கின்றனர். (202 - 100)

# இரண்டாம் தவணை ஆரம்பமாகியும் பாடநூல்கள் முழுவதும் வந்து சேரவில்லை

இரண்டாம் தவணைக்காக யாழ். குடாநாட்டில் பாடசாலைகள் ஆரம்பமாகிவிட்ட போதிலும், மாணவர்களுக்குரிய பாடநூல்கள் முழுமையாகக் இன்னும் கிடைக்கப் பெறவில்லை.

புதிய கல்வித் திட்டத்தின் கீழ் ஆண்டு 10 மாணவர்களுக்கான கணிதம், இந்து சமயம், தமிழ்மொழி ஆகிய பாடங்களுக்கான நூல்களே இதுவரை குடாநாட்டுப் பாடசாலைகளுக்கு கிடைக்கவில்லை.

இதேபோன்று, கல்வி வலயங்களுக்கு இடையேயும் கூட வேறுபட்ட வகைகளில் பாடசாலைகளுக்கான புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

குறிப்பாக யாழ். குடாநாட்டுக்கான பாடநூல்கள் மட்டுப்படுத்திய அளவில் அனுப்பப்பட்டுள்ளமையால், முழுமையாக அனைவரினதும் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் உள்ளதாகக் கல்வி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ-68)



*கொமர்ஷல் வங்கி நெல்லியடிக் கிளையின் 'அருணலு' புலமைபரிசில் பரிசளிப்பு விழா கடந்த 18ஆம் திகதி வங்கி முகாமையாளர் எஸ்.கே. குணசிங்கம் தலைமையில் நடைபெற்றது.*

*இவ்விழா புலமைபரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களை பெறும் மாணவர்களை கௌரவிக்கும் முகமாக ஒழுங்கு செய்யப்பட்டு வருடம் தோறும் நடைபெற்று வருகின்றது. இம்முறை 23 மாணவர்கள் தகுதி பெற்று பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டனர். விழாவில் வங்கி முகாமையாளர், சித்தியடைந்த மாணவன் ஒருவனுக்கு சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பதை முதலாவது படத்திலும் -*

*பரிசில் பெற்ற மாணவர்கள் மற்றும் வங்கி அதிகாரிகளை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள் - சுந்தா)*

# கமநெகும, நிகாப் திட்டங்களின் கீழ் கல்விளான் கிராமம் அபிவிருத்தி

யாழ்ப்பாணம்,மே 9

வலி. மேற்கு (சங்கானை) பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்விளான் கிராமம் 'கமநெகும' மற்றும் 'நிகாப்' திட்டங்களின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பொன்னாலை கல்விளான், தொல்புரம் - வீராவத்தை, கொட்டியாவத்தை, அராலி - கணவக்கை, சுழிபுரம் - காட்டுப்புலம் ஆகிய சிறிய கிராமங்கள் நீண்ட காலமாக அபிவிருத்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்தன.

இதன் முதற்கட்டமாக 113 குடும்பங்களைக் கொண்ட கல்விளான் கிராமத்தை 'கமநெகும' மற்றும் 'நிகாப்' (உலக வங்கி வீடமைப்புத் திட்டம்) திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்ய வலி.மேற்கு பிரதேச செயலர் திருமதி பாபு நடவடிக்கை எடுத்துள்ளார்.

இக்கிராமத்தில் வீடுகள், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், பாலர் பாடசாலை, குடிதண்ணீர் வசதி மற்றும் வீதி அபிவிருத்தி போன்ற அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத கிராமம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை-

வீராவத்தை, கொட்டியாவத்தை, கணவக்கை, காட்டுப்புலம் ஆகிய கிராமங்களும் படிப்படியாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (202-95)

## மண்எண்ணெய் விநியோகம்

கல்வியங்காடு தேவகுருநாதன் ..ரி பொருள் நிரப்பு நிலையத்தில் இந்த மாதத்திற்கான மண்எண்ணெய் ஜே/ 110, ஜே/ 106, ஜே/ 112 ஆகிய கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தகுடும்பங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றது. (202 - 111)

## கணித,விஞ்ஞான போட்டிகள்

யாழ்ப்பாணம்,மே 9

தென்மாராட்சி கல்விவலயப் பாடசாலைகளில்தரம் 6 தொடக்கம் தரம்13வரையான மாணவர்களுக்கு பாடசாலை மட்ட கணித, விஞ்ஞான பாட போட்டி கள் நடைபெற்று வருகின்றன. வலயமட்டப் போட்டிகள்விரைவில் விரைவில் நடத்தப்படவுள்ளதால் வெற்றி பெற்றமாணவர்களின்விவரங்களை உடனடியாக அனுப்பிவைக்குமாறு பாடசாலை அதிபர்களை வலயக்கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (202-207)

## கரவெட்டி விக்னேஸ்வரா பழைய மாணவன் ஓட்ட நிகழ்வில் அகில இலங்கை ரீதியில் சாதனை



யாழ்ப்பாணம், மே9

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவனும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவனுமான மகாலிங்கம் சிவாஜி 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்ட நிகழ்வில் அகில இலங்கை மட்டசாதனையாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கரணவாயைச் சேர்ந்த இம் மாணவன் அகில இலங்கை ரீதியில் பல்கலைக்கழகங்களுக்கிடையில் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டியில் பங்குபற்றி இச் சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

உலக பல்கலைக்கழகங்களுக்கிடையில் தாய்லாந்தில் நேற்று ஆரம்பமான மெய்வன்மைப் போட்டியிலும் இவர் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(202)

# சைவ சமய அறிவுப் போட்டியின் பரிசளிப்பு விழா வெள்ளியன்று

யாழ்ப்பாணம், மே9

கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக்குழுவால் நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்புவிழா எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குழுவின் தலைவரும் மாநகர ஆணையாளருமான மு.செ.சரவணபவ தலைமையில் இந் நிகழ்வு நடைபெறும்.

யாழ்.மாவட்டத்தில் 36 நிலையங்களில் 5 பிரிவுகளாக இப்போட்டி நடத்தப்பட்டது.

போட்டிகளில் முதல் 3 இடங்களைப் பெற்றவர்களின் விவரம் வருமாறு:

**பாலர் பிரிவு**

சி.கார்த்திகா (சாவகச்சேரி இ.ஆ.பாடசாலை), ச.கோகுலன்(புனித ஜோன் பொஸ்கோ வித்தி.), ஜெ.டினோஜா( உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

**கீழ்ப்பிரிவு**

ம.ரம்மியா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ம.மாதங்கி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), பா.லக்சிப்பிரியா (நெல்லியடி ம.ம. வித்தி.).

**மத்திய பிரிவு**

மு.மிதிலா (இணுவில் மத்திய கல்லூரி), செ.பிரியங்கா (திருக்குடும்ப கன்னியர் மடம்), க.லக்சனா (மெதடிஸ்ற் பெ.உ.பாடசாலை).

**மேற்பிரிவு**

கி.திரோஜி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), நி.கீர்த்தனா (சாவகச்சேரி இ. கல்லூரி), சூ.சூரியதட்சாயினி(கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி).

**அதிமேற்பிரிவு**

ச.மதுரா (சுண்டுக்குளி ம.கல்லூரி), இ.ராதிகா(சாவகச்சேரி இ.கல்லூரி), இ.நிஷா (அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரி. (202-111)

# அந்தப் பணம் எந்த வகை சார்ந்தது?

**வாசகர் திருமுகம்**

கடந்த 07.05.2007 ஆம் திகதியன்று யாழ். நகரில் உள்ள நவீன சந்தை மேல்மாடியில் அமைந்திருக்கும் மக்கள் வங்கிக்குச் செல்வதற்காக, நவீன சந்தையின் மேற்குப் புறமுள்ள ஓடையில் எனது சைக்கிளை விட்டுச் சென்றேன்.

திரும்பி வந்து பார்த்தபோது, சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் நின்றது. சைக்கிளை எடுக்கச் சென்றவேளை, பத்து ரூபா தண்டம் தந்துவிட்டுச் செல்லுங்கள் என்றார் பாதுகாப்பு நிலையத்தில் நின்ற ஊழியர் ஒருவர்.

பத்து ரூபாவைக் கொடுத்துவிட்டு வந்தேன். உடனடியாக மாநகர சபையுடன் தொடர்பு கொண்டு சைக்கிள் பாதுகாப்பு நிலையத்திற்கு வெளியே சைக்கிள் நிறுத்தினால் பத்து ரூபா தண்டம் அறவிடுகிறீர்களா என்று வினவினேன். பதிலளித்த அதிகாரி, அப்படியில்லை நீங்கள் வழங்கிய பத்து ரூபாவிற்குப் பற்றுச்சீட்டைக் கேளுங்கள் என்றார்.

நான் பற்றுச்சீட்டைக் கேட்டதற்கு நாளைக்கு வாருங்கள் அச்சடித்துத் தருகிறோம் எனக் கேலியும் கிண்டலுமாகப் பதிலளித்தனர் பாதுகாப்பு நிலையத்தில் நின்ற ஊழியர்கள். அத்தோடு நிற்கவில்லை ''களைத்து விட்டீர்கள் போலிருக்கின்றது வாருங்கள் தேநீர் வாங்கித் தருகின்றோம்'' என்றும் நக்கலாகக் கூறினர்.

1980ஆம் ஆண்டிற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் சில உள்ளூராட்சிச் சபைகளில் சண்டியன்மாருக்கே சந்தைக் குத்தகை போன்றன வழங்கப்பட்டன. சந்தைகளில் அவர்களின் அடியாள்களின் தர்பாரே நிலவியது.

ஆனால் 1983 ஆம் ஆண்டின் பின் துப்பாக்கிகள் யாழ்ப்பாணத்தில் மலிந்த கையோடு சண்டியன்மார் ஒழிக்கப்பட்டுவிட்டனர்.

என்னிடம் பெறப்பட்ட பணம் (10 ரூபா) எந்த வகை சார்ந்தது? கட்டணமா, தண்டமா, கப்பமா? ஏனையவர்களும் இந்நிலைக்கு ஆளாகக் கூடாது என்பதற்காக இதனைப் பத்திரிகைக்கு எழுதுகிறேன்.

ந.பரமேஸ்வரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## COMPUTER EXPRESS
**Institute of Information Technology**
#15, Sirambiyadi Lane, Jaffna.
Branch : #167, Kasthuriyar Rd, Jaffna.
Phone : 021 222 8250, 0777 222 422

அலுவலக ஊழியர்களிற்கான நன்மைகருதி விடுமுறைகால (சனி - ஞாயிறு) ஒருமாதகால விசேடவகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளது.

| | |
|---|---|
| Diploma in Microsoft Office | 1000/- |
| Diploma in Desktop Publishing | ~~2250/-~~ 1450/- |
| Diploma in Computerized Accounting | ~~5000/-~~ 3500/- |
| Diploma in Hardware Engineering | ~~2250/-~~ 1450/- |
| Diploma in Video Editing | ~~5000/-~~ 3000/- |
| Diploma in Graphic Designing | ~~2250/-~~ 1650/- |
| Diploma in AutoCAD | ~~2250/-~~ 1450/- |

வகுப்புக்கள் ஆரம்பம் : 12/05/2007 - 09.00



## DirecT Star
விசேட பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்
தொழில்வாய்ப்புகளை பெற்றுத்தரும் கற்கைநெறி

- Certificate in Information Technology
- Diploma in MS Office Application
- Diploma in Desktop Publishing
- Diploma in Computerised Accounting
- Diploma in Web Design

ACTOS — Member of Association of Computer Professionals
for All Courses Duration 3 months

Education Partner CSC Computer Education — ISO 9000 : 2001 Certified Institution

- Diploma in Digital Pre-Press
- Diploma in Digital Video Production
- Diploma in PC Professional
- Diploma in Advanced Software Technology
- Diploma in Web Design & Development

மேலதிக விபரங்களுக்கு எமது பயிற்சி மையங்களை நாடுங்கள்

Tally Training — AUTHORISED ACADEMY

## ASIAN COMPUTER SYSTEMS

| யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் - CSC | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|
| 2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021-222 5677 | 101,2ம் மாடி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021-222 8196 | கண்டி வீதி, சாவகச்சேரி. 077-3039587 | கொடிகாமம் ரோட், நெல்லியடி. 077-3122198 |



## மணமகள் தேவை
லண்டனில் வசிக்கும் யாழ். இந்து கௌரவ குடும்பம், 1970, சுவாதி, துலாம் ராசி, 19 கிரக பாவம், 5' 10" உயரம், சிவந்தமேனி, CHARTED ACCOUNTANT மணமகனுக்கு UKயில் படித்த, அழகான, குடியுரிமையுடைய மணப் பெண் தேவை.

தொடர்புக்கு:
**சிவாலயா சர்வதேச திருமண நிலையம்**
No. 389 C, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
T.P.: 0775834982 (60379)


## கண்ணீர் அஞ்சலி
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரியின்
ஆசிரியராக கடமையாற்றும்
திருமதி பொ.இராசரத்தினம்
அவர்களின் அன்புத் தாய்

**திருமதி**
**சுப்பிரமணியம் செல்லம்மா**

அவர்களின் மறைவையிட்டு எமது கவலையையும் ஆழ்ந்த அனுதாபங்களையும் அன்னாரது குடும்பத்தினருக்குத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி**
**ஆசிரிய சகோதரத்துவ உறுப்பினர்கள்,**
**கல்விசாரா ஊழியர்கள்.**
(60416)


புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!
COMPUTER EXPRESS
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office: No 15, Sirumbiyadi Lane (off Stanly Rd.) 021-222 8250, 0777 222422
Branch office: No 167, Kasthuriyar Rd. (Near Uthayan Publication) Jaffna.

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc.
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introdiction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macro media Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:-14/05/2007- 09.00 AM

அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் 11/05/2007, 12/05/2007 13/05/2007, 16/05/2007 ம் திகதிகளில் ஆரம்பமாகின்றது


## 45 ஆம் நாள் நினைவு அஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25 - 09 - 1957 | 26 - 03 - 2007 |



அமரர்
**முருகேசு சங்கரப்பிள்ளை**

கடந்த 26.03.2007 அன்று சிவபதமடைந்த எமது மாமனாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (09.05.2007) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
சுரேஷ்குமரன் (மருமகன்)
*கள்ளித்தெரு, காரைநகர்.* (60397)


## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
## The Jaffna Education Centre
(நாதன் திரையரங்குக்கு முன்பாக மேல் மாடியில்)

**Spoken English With Grammar**
**சிங்களம்**
Short Hand Typing இருமொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.
பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தனியாக வகுப்புகள் எடுக்கப்படும்.
முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
புதிய பிரிவு ஆரம்பம்: 10.05.2007

நிர்வாகி,
இ.லோகநாயகி.
(60412)


## CARE INTERNATIONAL - SRI LANKA
***CARE International Sri Lanka is an INGO actively involved in addressing issues of social marginalization throughout the country. It implements a diverse portfolio of programmes in Peace Building & Reconciliation, Capacity Building, Gender Power Relations, Micro Finance, Agricultural Development, Business Development, and Water Resources Management.***

*We seek the services of a qualified, proactive, and self-motivated individual to join our team in the Post Tsunami Development & Rehabilitation Project in Jaffna.*

### ADMINISTRATION OFFICER - JAFFNA
The incumbent will be responsible for overall premises management, safety of all material resources, creating & maintaining a database and liaising with relevant external agencies, supervision of staff, handling of CARE leases & asset management, producing analytical reports on operational consumption of the Area Office, providing logistical support to the programme, fleet management & maintenance.

A diploma/professional qualification from a recognized institute in a related field of study with 03 years' experience in a similar capacity is required. The position requires a proven track record in managing administrative aspects as well as good written and oral communication & presentation skills in English. Proficiency in Sinhala and/or Tamil is desirable. Applicants should have planning, analytical, inter-personal skills and be computer literate.

The position is Jaffna based with occasional field travel, and the appointment will be on renewable Contract basis.

Suitably qualified candidates are encouraged to apply with contact details of **three non-related referees within 10 days of this advertisement**. The post applied for should be indicated on the top left-hand corner of the envelope. We thank all applicants, but only the short-listed candidates will be notified.

**Women are highly encouraged to apply.**

**CARE is an equal opportunity employer**

**Project Director**
**CARE INTERNATIONAL SRI LANKA**
**Jaffna Area Office**
**15, Kandy Road,**
**Jaffna**
**Email: hrd@care.lk**

***Canvassing will be an immediate disqualification.***

## Hatton National Bank
### அடகுப்பொருள்களை மீட்டல்/விற்பனைக்கான அறிவித்தல்

எமது கிளைகளான யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லிவீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் அடகு சேவை வசதிபெற்ற வாடிக்கையாளர் கவனத்திற்கு,

நீங்கள் பெற்ற அடகுக் கடனுக்குரிய சீட்டின் மறுபக்கத்தில் குறிப்பிட்ட விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய அடகு வைக்கப்பட்டுள்ள பொருள்களை ஒருவருட காலத்திற்குள் கடன் செலுத்தப்பட்டு மீட்கப்பட வேண்டும் என்பதனை அறியத்தருகின்றோம்.

தங்களால் பெறப்பட்ட கடனின் முழுப் பகுதியையும் உடனே செலுத்த முடியாவிட்டால் கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா.500/-) செலுத்திக் காலாவதித் திகதியை நீடித்துக்கொள்ளலாம்.

ஒருவருடத்திற்கு மேற்பட்ட அடகுப்பொருள்களை மீட்க காலாவதித் திகதியை நீடிக்க, ஆவன செய்யாத வாடிக்கையாளர்களின் அடகுப்பொருள்கள் ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் என்பதனை இத்தால் அறியத் தருகின்றோம்.

\- முகாமையாளர்.
(க/52372)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23 - 05 - 1921 | 09 - 05 - 2002 |



**திருமதி கமலாம்பிகை ஆறுமுகம்தம்பி**
(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை)

பஞ்சபூதங்கள் இல்லாது வாழமுடியுமோ!
நீங்கள் இல்லாதது எங்களுக்கும் அதுபோல்.

*274, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.* (60417)
ராகுலன் (அம்பி - Swiss)
கங்காதரன் ராகினி (அம்மணி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டி ஆட்சி முறை இலங்கையை விழுங்கக் கூடிய பெரும் பூதமா?

**இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சமஷ்டி முறையிலான தீர்வு காணப்படுவதே மிகப் பொருத்தமான நடவடிக்கையாகும் என பல தரப்புகளால் இன்று கருத்து வெளிப்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், சிங்கள பேரினவாதப் போக்கில் செயற்படும் தென்பகுதி அரசியல் அணிகள் அது நாட்டை விழுங்கிவிடும் என்று பயமுறுத்தி வருகின்றன.**

**இக்கட்டுரை ஒற்றையாட்சி அடிப்படையில் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது இயலாத ஒன்றென நிறுவ முயல்கிறது. இதனை சிறில் பதிரணகே சிங்களத்தில் எழுதியுள்ளார்.**

**அதன் தமிழ் வடிவம் இது.**

1948ஆம் ஆண்டில் இந்த நாடு சுதந்திரம் அடைந்ததன் பின்னர், நாட்டில் உருவாக்கப்பட்ட சிங்கள மேலாண்மை நிலைப்பாட்டுடனான ஒற்றையாட்சி நடைமுறையில், தம்மையும் இணைத்துக்கொள்ளுமாறும் நாட்டின் சுயநிர்ணயம் தொடர்பாகத் தாமும் பங்கெடுக்கும் வகையில் தம்மையும் இணைத்துக்கொள்ளுமாறு சமாதான முறையில் சிறுபான்மையினத்தினரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. ஆனால், சிங்கள மேலாண்மைத் தரப்புகளால் அக்கோரிக்கைகள் புறமொதுக்கப்பட்டன. அதுமட்டுமன்றி சிறுபான்மை இனத்தவரின் நில உரிமை, மொழி மற்றும் உயர்கல்வி பெறும் உரிமை என்பன அச்சிங்கள மேலாண்மைத் தரப்புகளால் பறிக்கப்பட்டன. அதன் காரணமாக தமக்கு உருத்துடைய உரிமைகளை வழங்க மறுக்கும் சிங்கள மேலாண்மை நிர்வாகத்தின் கீழ் வாழ்வதைவிட தமக்கென சுயநிர்ணய உரிமையுடனான அதிகார நிர்வாகமொன்றை உருவாக்கிக் கொள்ளும் எண்ணம் சிறுபான்மை இனத் தரப்பின் மத்தியில் தலைதூக்கியது. அதன் பிரதிபலிப்பாக சாத்வீக முறையிலான போராட்ட மூலம் தமது உரிமைகளை அடையும் முயற்சி பலனளிக்கத் தவறியமையால், காலப்போக்கில் ஆயுதப் போராட்டத்தின் மூலம் தமது அத்தகைய உரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் முயற்சியில் சிறுபான்மைச் சமூகம் ஈடுபடும் நிலையை அச்சிங்கள மேலாதிக்கத் தரப்புகள் ஏற்படுத்தி வைத்தன. இத்தகைய முயற்சிஆரம்பத்தில் ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்கு உட்பட்ட நிலையிலேயே அணுகப்பட்டன. அந்த வகையில் ஒற்றையாட்சிக் கட்டமைப்பு என்பது குறித்த தெளிவானதொரு விளக்கத்தை நாம் உணர வேண்டியுள்ளது. அவ்வாறு ஒற்றையாட்சிக் கட்டமைப்பு என்பது குறித்த அடிப்படை விவரங்கள் குறித்து தெளிவான விளக்கத்தை உணரத் தவறும் பட்சத்தில், தூர நோக்கற்ற இன்றைய அரசியல் தலைவர்களது சிறுபிள்ளைத்தனமான கருத்து வெளிப்பாடுகளால் நாம் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்ட நேரும்.

### ஒற்றையாட்சி நடைமுறை பயனளிக்காது

ஒற்றையாட்சி முறையின் அடிப்படைக் கோட்பாடு, ஓரிடத்திலிருந்து மட்டுமே அரச நிர்வாகத்துக்குரிய சட்ட நடைமுறை உருவாக்கப்படுகின்றது என்பதாகும். அந்தவகையில் நாடாளுமன்றமொன்றின் ஊடாகவே அரசமைப்பு அதிகாரம், நிறைவேற்று அதிகாரம் மற்றும் நீதிமன்ற அதிகாரம் என்பன ஒட்டுமொத்த நாட்டில் அமுல்படுத்தப்பட்டாக வேண்டும். இன ரீதியில் வேறுபாடற்ற ஒரே சமுதாயத்தைக் கொண்டுள்ள நாடொன்றுக்கு இது ஆக்கபூர்வமான வெற்றியளிக்குமொரு நடைமுறையாக அமையுமென நம்பமுடிந்தாலும், வேறுபட்ட கலாசாரங்களைக் கொண்ட சமுதாயமொன்றுக்கு இத்தகைய நடைமுறை பெருமளவில் பயனிக்கவல்லதாகக் கொள்ள இயலாது.

ஆனால், ஒற்றையாட்சி நடைமுறை மாதிரியொன்றில் ஒரேயொரு அதிகார மட்டமே செயற்படுமாகிலும் செயற்றின் மிக்க நிர்வாகமொன்றை அங்கு மேற்கொள்வதற்காக இத்தகைய அரசுகள் தமது அதிகாரங்கள் மத்திய அரசின் கீழ், உட்கட்டமைப்புகளுக்குத் தமது அதிகாரங்களைக் குறிப்பிடத் தக்கதோர் அளவுக்குப் பகிர்ந்தளிக்கின்றன. அத்தகையஅதிகாரப் பகிர்வுகளின் மாதிரிகள் பலவற்றை இத்தகைய ஒற்றையாட்சி நடைமுறைக் கட்டமைப்பொன்றில் இனம் கண்டுகொள்ள இயலும்.

### அரச அதிகாரங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தல்

இதன்கீழ், அரசுக்குரிய அரசமைப்பு அதிகாரம் குறிப்பிட்ட ஒவ்வொரு முறைமைக்கமைய உட்கட்டமைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்களது நிர்வாகத்தை இதற்கு உதாரணமாகக் குறிப்பிட இயலும். அந்தவகையில் தமது நிர்வாகம் தொடர்பான உச்சச் சட்ட விதிகளை உள்ளூராட்சி மன்றங்கள் நாடாளுமன்றத்தின் அனுமதியின் பேரிலேயே நடைமுறைப்படுத்தி வருகின்றன.

இதன்கீழ், அரசின் நிறைவேற்று அதிகாரங்கள் ஒருமுறைமைக்கமைய பகிர்ந்தளிக்கப்படுகின்றன. மாவட்ட மற்றும் பிரதேச செயலர் மட்டத்தினூடாக கிராம சேவையாளர்கள் தரப்பு வரை அவ்விதம் அரசின் நிறைவேற்று அதிகாரங்கள் பரவலாக்கப்படுவதை இதற்கு உதாரணமாகக் குறிப்பிட இயலும்.

## அதுவே நாட்டைத் தக்கவைத்து வளர்ச்சிக்கு வழிகோலும் என்ற கருத்தும் தெற்கில் உண்டு

### அதிகாரப் பகிர்வு

இதன்கீழ் அரசொன்றினது நிறைவேற்று அதிகாரம், அரசமைப்பு அதிகாரம் மற்றும் நீதிமன்ற அதிகாரம் என்பன நாடாளுமன்றத்தினதும் அரசின் முக்கிய பல நிறுவன மையங்கள் என்பவற்றால் பரிசீலிக்கப்பட்டதன் பின்னரே ஒரு முறைமைக்கமையப் பரவலாக்கப்படுகின்றன. இலங்கையின் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின்மூலம் உருவாக்கப்பட்ட மாகாண சபைகள் நடைமுறையை இதற்கானதோர் உதாரணமாகக் குறிப்பிடமுடியும். இந்த நடைமுறை ஒற்றையாட்சி நடைமுறையின் கீழ் அதிகபட்ச அதிகாரப் பகிர்வு நடைமுறை எனக் கருதத்தக்கது.

இற்றைவரை ஒற்றையாட்சி நடைமுறை பேணப்பட்டுவரும் பிரித்தானியாவின், ஸ்கொட்லாந்து மற்றும் அயர்லாந்து ஆகிய பகுதிகளுக்குத் தனியான நாடாளுமன்றத்தைப் பேணும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளபோதிலும், இந்தோனேசியாவில் 'அச்சே' மாகாணத்துக்கு சுயநிர்ணய நிர்வாக முறை வழங்கப்பட்டுள்ளபோதிலும் ஸ்கொட்லாந்து, அயர்லாந்து மற்றும் 'அச்சே நிர்வாகம்' ஆகியவை தம்மைத் தனியான அரசுகள் என நிலை நிறுத்திக் கொள்ள இயலாது.

### ஒத்திசைவு காணும் இணக்கத்தால் சமாதானத்தைப் பேணலாம்

அதிகாரங்கள் பரவலாக்கப்பட்ட ஒற்றையாட்சி நடைமுறை நாடொன்று, கட்டமைப்பு விதிகளுக்கு அப்பால் செல்லுமிடத்து, அதனை மத்திய அரசுக் கட்டமைப்புக்கு உட்படாததோர் (**Non Centralization**) அரச நிர்வாக வரைவாகவே கருதவேண்டியுள் ளது. இத்தகைய நடைமுறைக் கட்டமைப்பில் காணப்படும் விசேட அம்சமாகக் கருதத்தக்கது. இத்தகைய நிர்வாகத் தொகுதிகளுக்கு வழங்கப்படும் சுயநிர்ணய நிர்வாக அதிகாரங்கள் எந்த விதத்திலும் மத்திய அரசின் விமர்சனங்களுக்கு உட்படுத்தப்பட இயலாமையே ஆகும். இருந்தபோதிலும் அத்தகைய நிர்வாகத் தொகுதிகளுக்கும் மத்தியஅரசுக்கும் இடையில் முரண்பாடற்ற, சமநிலையில் நிர்வாகம் பேணப்படும் வகையில் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளும் அதிகாரங்களின்கீழ் நடைமுறைப் படுத்தப்படும். அது சுயாட்சி (**Self rule**) மற்றும் அதிகாரப் பகிர்வு (**Shared rule**) என்பவற்றின் அடிப்படைக் கோட்பாட்டுக்கு அமைய நிர்வாகம் மேற்கொள்ளப்படுதல் எனக் கொள்ளப்படும். இதன்படி பல்லினக் கலாசாரங்கள் கொண்ட சமூகமொன்றில் அரசொன்று உருவாக்கப்படும் வேளையில் அவ்அரசை உருவாக்கும் பிரமுகரைப் போன்றே, அந்நாட்டின் தேசிய இனத் தரப்புகளும் ஒத்திசைந்து காணும் இணக்கமொன்றின் மூலமும் அந்த அரசை உருவாக்கிக்கொள்ள இயலும். பல்லினங்களது கருத்து நிலைப்பாடுகளைச் சமநிலைப்படுத்திக்கொள்ளவும் அச்சகல இனங்களது சுதந்திரத்தை உறுதிப்படுத்திக்கொள்ளவும் முடியுமானால் அந்த இனங்கள் மத்தியில் சாமானதானத்தைப் பேணத்தக்கதொரு சமுதாயம் உருவமாகுமானால் அத்தகைய அதீத பலத்தினூடாகக் கட்டியெழுப்பப்படும் அரசொன்றால் எந்தவொரு வெளிச்சக்திகளால் விடுவிக்கப்படும் சவால்களையும் வென்றெடுக்க இயலும்.

### ஒற்றையாட்சிக்கு அப்பாற்பட்ட நிர்வாகக் கட்டமைப்பு

முறையாக அதிகாரங்கள் குவிக்கப்படாத அரசுகள் பரந்த நிலப்பிதேசமொன்றில் ஆழ்ந்து திட்டமிடப்படவேண்டிய நிர்வாகக் கட்டமைப்புகளைக் கொண்டமைவன. இவை கூட்டரசு அல்லது சமஷ்டி அரசு என இனம் காணப்படும். ஒரே நிர்வாகத்தின் கீழ் அமையும் அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தல் என்பதன் அடிப்படை நடைமுறை என்பது மத்திய மற்றும் மாநில அரசுகள் இடையே அரசமைப்பினூடான இணக்கமொன்றின் அடிப்படையில் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ளல் என்பதாகக் கொள்ளப்படும். இதில் அரசமைப்பே அடிப்படையாக அமைவதுடன் அது இனங்காண முடியாததொரு - சட்டத்தின் மூலம் வலியுறுத்தப்படாத - ஒன்றிணைப்பொன்று அவற்றின் மத்தியில் நிலவும். அந்தவகையில் எந்தவொரு மாநில அரசும் தமது விருப்புப்படி அரசமைப்பு விதிகளை மீறிச் செயற்படும் உரிமை வழங்கப்பட்டிருக்கவில்லை. கூட்டரசு மற்றும் சமஷ்டி அரசமைப்பு முறைமை சமஷ்டி முறைமையை எதிர்க்கும் பெரும்பாலானோரின் கருத்துப்படி அரசுகளைப் பல ஆண்டுகளாகப் பிரித்து உருக்குலைத்துவிடும் ஒரு மரணப் பொறியெனக் கருதப்படுகிறது. நாடுகள் இவ்விதம் பிளவுபட்டுத் தனித்தனியாகப் பிரிவதற்கு அந்த அரசுகளின் மத்தியில் அதிகாரங்கள் ஒற்றையாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் இறுக்கத்துடன் பேணப்படுவதே காரணமாக அமைகின்றது என்பதை அத்தரப்பினர் மறைத்துவிடுகின்றனர்.

### வடக்கில் வெற்றிகரமான தனியான நிர்வாகம்

இதற்கு இலங்கையை ஓர் உதாரணமாகக் குறிப்பிட இயலும். கீழ்க்காணும் அட்டவணை மூலம் இதனைத்தெளிவாகப் புரிந்துகொள்ள இயலும். இதன்படி அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட ஒற்றையாட்சி முறை நிலவும் நாடாக இலங்கையைக் குறிப்பிட முடிகிறது. அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் மூலம் இத்தகைய நிர்வாக முறை இங்கு அறிமுகமானது. ஆனால், இன்றைய எமது நாட்டின் அரசியல் நிலைப்பாட்டின்படி மேற்குறித்த அதிகரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட ஒற்றையாட்சி முறைக்கு மேற்சென்று எட்டப்படும் ஒரு நிர்வாகக் கட்டமைப்பே பொருத்தமானது என்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை.

ஆனால், இன்று தனியான நிலப்பிரதேசம், தனியான பாதுகாப்புப் படை, தனியான நீதித்துறை மற்றும் இத்தகைய நிர்வாகத்தை ஏற்றுக்கொள்ளும் பொதுமக்கள் வாழும் பிரதேசத்தை நிர்வகிக்கும் புறம்பானதொரு நிர்வாகத் தரப்பொன்றுடன் நிர்வாகம் பரிமாற்றமொன்றை மேற்கொள்ள வேண்டிய நிலை குறித்தே நாம் தற்போது அதி முக்கிய கவனம் செலுத்திச் செயற்படவேண்டி நேர்ந்துள்ளது.

இலங்கை அரசு என்ற வகையில் நாட்டை நிர்வகித்துச் செல்ல வேண்டியுள்ளபோதிலும், நாட்டின் வட பகுதியில் வெற்றிகரமான தனியான நிர்வாகமொன்று இடம்பெற்றுவரும் பின்னணியில் அதனை வெற்றிகொள்ள வேண்டிய நிலையிலும் நாம் உள்ளாகியிருப்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

### இனவாதிகளின் போக்கால் மக்களுக்கே பாதிப்பு

இந்த யதார்த்தம் தெளிவாகப் புலப்படும் நிலையிலும் ஒற்றையாட்சி என்ற மாயையில் மூழ்கி, சமஷ்டி ஆட்சிமுறை குறித்த பொய்யான பீதியை நாட்டுமக்கள் மத்தியில் எமது அரசியல்வாதிகள் உருவாக்கி வைத்துள்ளனர். குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்ட முயலும் விதத்திலான நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் இனவாத அரசியல் கட்சிகளுக்குக் கீழ்ப்படிந்து தொடர்ந்து அரசு இவ்விதத்தில் செயற்படுமானால் அதன் பலாபலனை இந்நாட்டின் அப்பாவி மக்களே அனுபவிக்கநேரும்.

அன்று அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மாகாண சபை நடைமுறை என்பது தமிழீழத்துக்கு வழிவகுத்துக் கொடுக்கும் செயற்பாடென பிரசாரம் மேற்கொண்டதன் மூலம் பல்லாயிரக்கணக்கான சாதாரண பொதுமக்களின் வாழ்வுரிமையைப் பறித்துக்கொண்டு இந்நாட்டின் இனவாத அரசியல்வாதிகளின் இத்தகைய 'கிணற்றுத் தவளை' கோட்பாட்டின் காரணமாக நாட்டின் பொதுமக்களே மேன்மேலும் துன்பங்களையும் துயரங்களையும் அனுவிக்க நேர்ந்துள்ளது.

இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு, இலங்கையின் பல்லின மற்றும் பல தரப்பட்ட கலாசாரப் பின்னணி கொண்ட இந்நாட்டின் சிறுபான்மை சமூகங்களை அரசின் நிர்வாகத்தில் இணைத்துக்கொண்டும் ஜனநாயக ரீதியிலான அரச நிர்வாக அலகொன்று உருவாக்கி வழங்க அரசு தவறியுள்ளதுடன் யுத்தத்தின் மூலமே தீர்வு என்ற தனது அபிலாசையை நிலைநிறுத்த முயற்சிக்குமானால் நாடு பெரும் ஆபத்தில் சிக்கிக்கொள்வதைத் தவிர்த்திட இயலாது. இந்த உண்மையை அரச தரப்பு மட்டுமன்றி எதிரணியினரும் இன்றைய காலகட்டத்தில் தமது முக்கிய கடப்பாடாகக் கருத வேண்டும்.

**தமிழில்: ராஜா**

சமஷ்டி ஆட்சி முறை இலங்கையை விழுங்கிவிடக்கூடிய பெரிய பூதம் என்று இனவாதிகள் 'படம் கீறிக் காட்டுகிறார்கள்.' அதற்கு உருவேற்றுவது போல பதவிக்கு வரும் அரசுத் தலைமைகள் சன்னதம் ஆடுகின்றன. ஆனால் சமஷ்டி முறையே இந்த நாட்டின் எதிர்காலத்துக்கும் வளர்ச்சிக்கும் உதவவல்லது.

சமஷ்டி என்றதும் ஒவ்வாமையாகக் கருதும் சிங்கள - பௌத்த பேரினவாதிகளின் கடும் போக்கினால் நாசமுறப் போவது நாடும் மக்களுமே. அந்தந்த காலத்துக்கு ஆட்சிக் கதிரையை அலங்கரிக்கும் தலைவர்கள் அரசியல் ஞானிகளாக இல்லாது தமது பதவிக்காலத்தை அனுபவித்துப் போகும் வெறும் அரசியல் தலைவர்களாகவே அரசியல் நீ இருக்கிறார்கள். இது நாட்டுக்கு நாசத்தையே உண்டாக்கும் என்பதனை உணர்ந்து சமஷ்டி முறை அரசமைப்பை உருவாக்க மனங்கொள்ள வேண்டும். முன்வருவார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் நாகலிங்கம் பாலகிருஷ்ணர் (பத்தர்)

அன்னையின் மடியில் 09 -11 -1920

ஆண்டவனின் அடியில் 09 - 05 - 1988

திதி : 09.05.2007

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்'

ஐயா! எங்களின் இதயத் தெய்வமே!
உங்களின் உயர்ந்த இலட்சியங்களை
எங்களது நெஞ்சினிலே சுமந்து
நீங்கள் காட்டிய சத்தியப் பாதையிலே
நாங்கள் உறுதியுடன் செல்வோம்!
தெய்வமாகிய உங்களின் இந்நினைவு நாளில்
நாங்கள் கண்ணீர் மலர்தூவி வணங்குகின்றோம்.

*மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு.*
*(மணியகாரன் வீதி,*
*தெல்லிப்பழை.)* (60402)

மனைவி,பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 08 - 08 - 1925

மறைவு 10 - 04 - 2007



### திருமதி தங்கரத்தினம் இராமநாதன்

தாய்க்கு ஒரு மகளாய்
தரணியில் உதித்த எம்தாயே!
மடந்தையர் நால்வரை - நல்
மாதராய் வாழ வைத்தீர்
இப் புவியில் நாம் வாழ
இங்கிதமாய் வழிவகுத்தீர்
இம் மாநிலத்தில் எமைவிட்டு
எங்கு தான் சென்றீரோ அம்மா!

எங்கள் குடும்பத்தலைவியின் மறைவுச் செய்தியறிந்து நேரில் வந்தும், கடிதம்,தொலைபேசிமூலமும் ஆறுதல்தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ,மரணச்சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும்,பலவகைகளிலும் உதவிகள் வழங்கியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிமூலம் அனுதாபம் தெரிவித்த யாழ்/நீர்வேலி சி.சி.த.க பாட சாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (09.05.2007)புதன்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம் .

*நீர்வேலி தெற்கு,*
*நீர்வேலி.* (60149)

பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா கெங்காதரன்



சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும் கொன்வென்ற் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா கெங்காதரன் நேற்று (08.05.2007) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தவநாயகம் கெங்காதரனின் (ஓய்வு பெற்ற கடற்படை உத்தியோகத்தர்) அன்பு மனைவியும் கனகலிங்கம், கார்த்தியேசு, வெள்ளியம்பலம், சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கனாவை வசிப்பிடமாகக் கொண்டவர்களான ஸ்ரீதரன், ராதிகா, நிர்மலா, சியாமளா ஆகியோரின் அன்புத் தாயாரும் தேவமனோகரி, இராஜமோகன், மகாலிங்கம், ஸ்ரீவரதன் ஆகியோரின் அன்பு மாமியும் நந்தினி, சுசாந் தினி, சர்மினி, நிலோஜினி, ரஜந்தன், சிந்துஜன், சுஜன், பிரியங்கா, எழில், பவன், சுவன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது பிறப்பிடமான சங்கரத்தை இல்லத்தில் இன்று (09.05.2007) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் சங்கரத்தை வழுக்கியாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சங்கர்த்தை, வட்டுக்கோட்டை.*
*வதிவிடம் : 41,கொன்வென்ற் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (60420)

தகவல்:
த.கெங்காதரன்
(கணவர்).

## தென்மராட்சிப் பிரதேச முதியோருக்கு அ.அட்டை

தென்மராட்சி,மே 9

தென்மராட்சிப் பிரதேச முதியோர்களுக்கு முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

முதியோர்களுக்கு முதலிடம் என்னும் திட்டத்தின்கீழ் திணைக்களங்களில் முன்னுரிமை வழங்கி அவர்களின் பணிகளை இலகுபடுத்தும் நோக்கில் அவர்களுக்கு இந்த அடையாளஅட்டை வழங்கப்படவுள்ளது.

பிரதேசத்தில் 65வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் முத்திரை அளவிலான மூன்று புகைப்படங்களுடன் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார். (202-207)

## நாவுக்கரசர் குருபூசை

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் நடத்தும் நாவுக்கரசர் குருபூசை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கோண்டாவில் நெட்டிலிப்பாய் ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலைப் பிரதான மண்பத்தில் நடைபெறவுள்ளது.

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரீகத் துறைத் தலைவர் கலாநிதி மா.வேதநாதன் கலந்துகொள்வார்.

நிகழ்வில் சைவப்புலவர் நித்தியதசீதரனின் சொற்பொழிவு, அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வு என்பனவும் இடம்பெறும். (202-79)

* * *

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை திரு நாவுக்கரசு நாயனார் குருபூசை விழாவை நடத்தவுள்ளது.

அன்று காலை 7 மணிக்கு யாழ்.நாவலர் வீதியில் உள்ள குருவார அன்னசத்திர சிவகாமி சுந்தரி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரர் ஆலயத்திலும் 9 மணிக்கு நல்லூர் சட்டநாதர் ஆலயத்திலும் குருபூசை நிகழ்வுகளை நடத்தவுள்ளனர். (203)

## ஒருக்கிணைப்புக் குழுக் கூட்டம்

யாழ்.சுகாதாரத் திணைக்களம் நடத்தும் மாதாந்த சுகாதார ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு சுகாதார திணைக்கள பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சுகாதார வைத்திய நிறுவனத் தலைவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சுகாதாரப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.(1-203)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

பிறிமா இறைச்சி கோழி மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு: மல்ரி பாம் சென்ரர்
61, இராமநாதன் வீதி, கலட்டி.
(மிலேனியம் ரெஸ்ரோறன்ட் முன்பாக)
வியாபாரிகளுக்கு விசேட விலைக் கழிவு
வழங்கப்படும்.

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌவர குடும்பம் 1968 இல் பிறந்த ரேவதி நட்சத்திரம், 8இல் செவ்வாய் உடைய பயிற்றப்பட்ட ஆசிரிய மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை.
தொடர்பு:
விளப்பர இலக்கம்:2968,
மே/பா உதயன். (60383)

## நீயூ மற்ஸ் அக்கடமி-மீசாலை

O\L Day Class மாணவர்களுக்கான கணித வகுப்பு மட்டும்.
ஆரம்பம்12.05.2007 சனி மு.ப.11 மணி
*ஆசிரியர்* : K.V.மதனா.
(60389) - நிர்வாகம்.

## நாய்க்குட்டி விற்பனைக்கு

மூன்று மாதம் நிரம்பிய அல்சேஷன்
கிறேடன், கறுப்பு நிற ஆண்,பெண் நாய்க்
குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: சி.தேவராசா
பந்தல் சேவை,
நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. (60429)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை
திருமதி க.கணேசமூர்த்தி
அவர்களின் அன்புத் தாய்

### திருமதி பாலசிங்கம் மகாலட்சுமி

அவர்களின் மறைவிற்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும்
பிரார்த்திக்கின்றோம்.

யா/வடமராட்சி இந்து மகளிர்
கல்லூரி சமூகம்,பருத்தித்துறை. (அ/52370)

## புனித சவேரியார் பெருவிழா புங்குடுதீவு மத்தி

11.05.2007 - 20.05.2007

*புனித சவேரியாரின் வருடாந்தத் திருவிழா 11.05.2007*
*அன்று பங்குத் தந்தை*
*ஆர்.பி.துரைரெத்தினம் அடிகளார் தலைமையில்*
*கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து*
*நாள்கள் நடைபெறும்.*
*திருநாள் திருப்பலி 20.05.2007 ஆம் திகதி*
*காலை 8.00மணிக்கு*
*ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம்*
*ஆண்டகை தலைமையில் நடைபெறும். தொடர்ந்து*
*சுற்றுப்பிரகாரத் தேர்ப் பவனியும் புனிதரின் இறை ஆசீரும்*
*வழங்கப்படும். அதனைத் தொடர்ந்து அனைவருக்கும்*
*அன்னதானம் வழங்கப்படும். அடியார்கள் அனைவரையும்*
*அன்புடன் அழைக்கின்றோம்.*

(60425)

பங்குத்தந்தையும்
பங்குமக்களும்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஆசிரியர்களுக்கிடையிலான
மென்பொருள் (Soft ware) ஆக்கப்
போட்டியில் வடக்கு மாகாண
மட்டத்தில் இரண்டாம் இடம்பெற்ற
எமது நண்பர்

### கு.வாகீசன்

*(பிரதி அதிபர், யா/ஸ்ரீ சோமஸ்கந்தக்*
*கல்லூரி,புத்தூர்.)*
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில்
மட்டற்ற மகிழ்வடைகின்றோம்.

(60426) - நண்பர்கள் வட்டம்.

## சேவை நலன் பாராட்டு



### திருமதி அ.செ.சவுந்தரநாயகம் (B.A., Dip. in Edu.)

(உதவி அதிபர் யா/ சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை)

01.06.1989 ஆம் ஆண்டு தொடக்கம் 30.04.2007 வரை எமது பாடசாலையில் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் சென்ற எமது உப அதிபரை அவரது சேவையைப் பாராட்டியும் அவரது ஓய்வுக் காலம் அமைதியும் இனிமையும் நிறைந்ததாக அமையவும் மனமார வாழ்த்தி நிற்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
ஊழியர்கள்,
யா/சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை.

(60424)

## யாழ். இராமநாதன் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்-2007

| | | |
|---|---|---|
| இடம் | :- | யாழ்/இராமநாதன் கல்லூரி பிரதான மண்டபம் |
| காலம் | :- | 12.05.2007 சனிக்கிழமை |
| நேரம் | :- | பிற்பகல் 2மணி |

*அனைத்து பழைய மாணவர்களையும் சமுகமளிக்குமாறு*
*அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.*

தலைவர். (60413) செயலாளர்.

## 45ஆம் நாள் நினைவலைகள்

பிறப்பு 17 . 11 . 1977

இறப்பு 26 . 03 . 2007



### அமரர் நடராஜா பாலமோகன்

அவர்களின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (09.05.2007) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*இருபாலை வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* (60428)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

## பிராயச்சித்தம் செய்யுமா பிரிட்டன்?

இலங்கையில் மோதலில் ஈடுபட்டிருக்கும் தரப்புகளுக்கு இடையே சமாதான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் பிரிட்டனில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும் உயர்நிலை முத்தரப்பு மாநாட்டில் கலந்துகொள்ளப் போவதில்லை என்று இலங்கை அரசு அறிவித்திருக்கின்றது.

இந்த அறிவிப்பு எதிர்பார்க்கப்பட்டதுதான் என்றாலும் உத்தேச மாநாட்டுக்கான உத்தியோகபூர்வ அழைப்புக் கிடைக்க முன்னரே - இந்த மாநாடு குறித்து பேச்சுகள் அடிபடும் ஆரம்ப நிலையிலேயே - இத்தகைய முடிவை முந்திக் கொண்டு கொழும்பு விடுக்கும் என்று எண்ணப்படவில்லை.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தைக் கையாள்வதற்கென - தனக்கென தனியான - இராணுவத் தீர்வை அடிப்படையாகக் கொண்ட - விசேட நிகழ்ச்சி நிரல் ஒன்றை வகுத்து, அதன்படி காரியங்களை மேற்கொண்டு, காய்களை நகர்த்திவரும் இலங்கை அரசு, அதைக் குழப்பும் விதத்திலான மேற்படி முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கி, இணங்கிச் செயற்படாது என்பது நிச்சயம்.

இலங்கை விவகாரம் தொடர்பாக பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் நடத்தப்பட்ட விசேட விவாதம் மற்றும் அது சம்பந்தமாக எழுந்துள்ள சர்ச்சைகள் குறித்து அரசு அலட்டிக்கொள்ள மாட்டாது என்றும் அரசுப் பேச்சாளர் அறிவித்திருக்கின்றார்.

ஆக, இலங்கை விவகாரம் குறித்து கவனமும், சிரத்தையும் கொண்டுள்ள பிரிட்டிஷ் நாடாளுமன்றக் குழுவுக்கு இலங்கை அரசு தெளிவான செய்தி ஒன்றைச் சொல்லி விட்டது. நீங்கள் உங்கள் வேலையைப் பார்த்துக்கொண்டு போங்கள் என்பதுதான் அந்தத் திட்டவட்டமான செய்தி.

சரி. பிரிட்டிஷ் சர்வகட்சி நாடாளுமன்றக் குழு இது விடயத்தில் இனி என்ன செய்யப்போகின்றது? இலங்கையில் மோசமடைந்து வரும் நிலைமை குறித்து முன்னெப்போதுமில்லாதவாறு, பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் கடந்தவாரம் உரக்கக் குரல் எழுப்பி, இவ்விடயத்தின்பால் உலகின் கவனத்தைத் திருப்பிய பிரிட்டிஷ் எம். பிக்கள், இப்போது முகத்தில் அடித்தாற்போல இலங்கை அரசு விடுத்திருக்கும் அறிவிப்பை அடுத்து வாயை மூடிக் கொண்டு அமைதி காக்கப் போகின்றனரா? அல்லது ஆக்கபூர்வமாக ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளப் போகின்றனரா?

இது விடயத்தில் பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒரு தீர்க்கமான முடிவை எடுப்பதற்கு முன்னர் அந்தக் குழுவுக்கு சில விடயங்களை - ஈழத் தமிழர் தரப்பிலிருந்து - சுட்டிக்காட்டுவது நமது கடமையும் பொறுப்புமாகின்றது.

இலங்கைத் தீவில் ஈழத் தமிழருக்கு எதிரான கொடூர அடக்குமுறை கட்டவிழ்வதற்கும், அப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட அமைதி முயற்சிகள் இப்போது மோசமான கட்டத்தை அடைந்து, குழம்பி, பெரும்போர் வெடிக்கக்கூடிய இன்றைய இக்கட்டு நிலைமை ஏற்பட்டதற்கும் பிரிட்டிஷ் அரசுத் தலைமைகளின் பொறுப்பற்ற - உதாசீனமான - போக்கே பிரதான காரணம் என்பதை அவர்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறோம்.

சரித்திர காலம்தொட்டு இலங்கைத் தீவில் தமிழர்களும், சிங்களவர்களும் தனித்தனி மொழி, பண்பாடு, பழக்க வழக்கங்கள், வெவ்வேறான தாயகங்கள் என்பவற்றுடன் இரண்டு வெவ்வேறு தேசங்களாகவும் தேசியங்களாகவுமே வாழ்ந்து வந்தனர்.

தமிழர் தேசம், சிங்களவர் தேசம் ஆகிய இரண்டையும் ஆக்கிரமித்த போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகிய இரண்டு ஆக்கிரமிப்பாளர்களுமே இந்த இரண்டு தேசங்களையும் - அவற்றின் பிரதேச ஒருமைப்பாட்டையும் இன அடையாளத் தனித்துவத்தையும் மதித்து - அங்கீகரித்து - இரண்டு வெவ்வேறு நிர்வாக அலகுகளாகவே அவற்றைக் கட்டியாண்டனர்.

ஆனால் இலங்கைத் தீவின் ஆட்சிக்கட்டுப்பாட்டை ஒல்லாந்தரிடமிருந்து பற்றிக்கொண்ட பிரிட்டன், இந்த இரு தேசங்களினதும், தேசியங்களினதும் தனித்துவங்களைப் பொருட்படுத்தாது - தமது நிர்வாக வசதிக்காக - அவற்றை ஒரு நிர்வாக அலகின் கீழ் கொண்டுவந்து ஒற்றையாட்சி அமைப்பைத் திணித்தனர்.

இப்படி பிரிட்டனின் அந்நிய குடியேற்றவாதம், பொறுப்பற்று நடந்துகொண்டதன் மூலம் -

இலங்கைத்தீவில் எண்ணிக்கையில் சிறுபான்மையினரான தமிழர்களின் தேசம் மற்றும் தேசியத்தின் தனித்துவத்தை எண்ணிக்கையில் பெரும்பான்மையினரான சிங்களவர்களின் கைகளில் சிறைவைக்க இடமளித்து, இந்தத் தீவின் இனப்பிரச்சினைக்கு அடித்தளமிட்டது.

இலங்கைத் தீவில் கிறிஸ்துவுக்கு முந்திய காலம்வரை தொடர்ந்து செல்லும் தொன்மைமிக்க ஆழமான வரலாற்று வேரோடல்களைக் கொண்டுள்ள சிங்களவர்களும் தமிழர்களும் தனித்தன்மைகளையுடைய இனங்களாகக் கணிக்கப்படும் தேசத்தையும், தேசியத்தையும் இனக் கட்டமைப்புச் சிறப்பியல்புகளையும் கொண்டுள்ளனர்.

அந்தத் தனித்துவத்தை புறமொதுக்கி, தமிழர் தேசத்தின் பிரதேச ஒருமைப்பாட்டைச் சிதைத்து, அதன் இறைமையைத் தீவின் பெரும்பான்மையின சிங்களவர்களிடம் அடிபணிய வைத்ததன் மூலம் இலங்கைத் தீவில் தீர்க்கப்படமுடியாத வகையில் இனப்பிரச்சினை மோசமடைவதற்கு கால்கோள் இட்டு, வரலாற்றுத் தவறு இழைத்தவர்கள் பிரிட்டிஷாரே.

அதுமட்டுமல்ல.

2002 முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட தற்போதைய அமைதி முயற்சிகளில் இலங்கை அரசுத் தரப்பினரும் தமிழர்களின் ஏக பிரதிநிதிகளான புலிகளும் சமதரப்பு அந்தஸ்தோடு பங்குபற்றி, அதனை முன்னெடுக்க அப்போது திடசங்கற்பம் கொண்டனர்.

அந்நிலையில், அதில் ஒரு தரப்பினரான புலிகளை, சுமார் இருபத்தியைந்து நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியம் பயங்கரவாத நாடாகப் பட்டியலிட்டு அறிவிக்க அந்த அமைப்பைத் தூண்டி, அதற்கான கைங்கரியத்தை முன்னின்று நடத்தியதும் பிரிட்டன்தான்.

இப்படி அறிவிக்கச் செய்ததன் மூலம் அமைதி முயற்சிகளில் புலிகள் தரப்பின் சம அந்தஸ்துத் தரம் பாதிக்கப்பட்டு, அதன் மூலம் அந்த சமாதான எத்தனங்கள் குடைசாய்வதற்கு முட்டுக்கட்டை போட்ட பெருமையையும் பிரிட்டனே சுவீகரித்துக் கொண்டது.

எனவே இவ்வாறு வரலாற்றுத் தவறுகளைத் தொடர்ந்து புரிந்து இந்தத் தீவின் அமைதியும், சமரசவாழ்வும், நல்லிணக்க சுமுக நிலையும் பாதிப்புறவும், தமிழர்களுக்கு காலாதிகாலக் கெடுதி நேரவும் காலாக அமைந்த பிரிட்டன், அதற்கான பிராயச்சித்தத்தைச் செய்யவேண்டிய கடப்பாட்டிலும் பொறுப்பிலும் உள்ளது என்பதை அதன் ஜனநாயகத் தலைவர்களுக்கு - எம். பிக்களுக்கு - நினைவூட்டவும் சுட்டிக்காட்டவும் விரும்புகிறோம்.

# கடத்தப்பட்ட மாணவரை விடுவிப்பதாலேயே போராட்டங்களைத் தவிர்க்க முடியும்

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே9

ஆயுத தாரிகளால் கடத்தப்பட்ட சகல பாடசாலை மாணவர்களையும் எதுவித உயிராபத்தும் இன்றி விடுதலை செய்ய வேண்டும். அதுவே மாணவர்கள் கல்விப் போராட்டங்களில் இறங்குவதைத் தவிர்க்கும்.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று விடுத்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தம்மீதான வன்முறைகள் தொடர்பாக மாணவர்கள் தொடர்ச்சியாக குரல் கொடுத்து வந்த போதிலும் அவை பயனற்றவையாகவே உள்ளன. குடாநாட்டில் பல்கலைக்கழக மற்றும் பாடசாலை மாணவர்கள் மீதான தொடர் கடத்தல்கள், கொலைகள், அச்சுறுத்தல்கள் என்பன எமது சமூகத்தின் கல்விச் செயற்பாடுகளை பாதிப்படையச் செய்யும் நோக்கத்துடனேயே இடம்பெறுவதாக எண்ணுகின்றோம். இந் நிலையில் கடந்த வெள்ளியிரவு எமது மாணவர்கள் பொது அறையில் மாணவர் அஞ்சலி மையம் சேதப்படுத்தப்பட்டது. அன்றைய நாள் நான்கு பாடசாலை மாணவர்கள் கடத்தப்பட்டுள்ளனர்.

இவர்களை விடுவிப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவர்கள் விடுவிக்கப்படாத பட்சத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குடா நாடளாவிய ரீதியில், கல்வி செயற்பாட்டு முடக்கம் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப் போவதாக தெரிவித்துள்ளது. அந்த அழைப்பை ஏற்று எமது மாணவர்கள் பகிஷ்கரிப்பு செயற்பாடுகளில் இறங்குவதற்கான வாய்ப்புக்கள் நிறையவே உள்ளன. உயர் கல்விச் சமூகத்தின் அங்கத்தவர்கள் எனும் அடிப்படையில் நாம் அவர்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டிய தேவையுள்ளது. எனவே ஆயுத தாரிகளினால் கடத்தப்பட்ட சகல பாடசாலை மாணவர்களையும் எதுவித உயிராபத்தும் இன்றி விடுதலை செய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

### சமூக அக்கறை கொண்டவர்கள் உதவ வேண்டும்

இதற்காக சமூக அக்கறை கொண்ட மதப் பெரியார்கள், கல்வியாளர்கள், அரச அதிகாரிகள் அனைவரும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாணவர்கள் கல்விப் புறக்கணிப்பு போராட்டங்களில் இறங்குவதை தவிர்க்க இது உதவும். எமது ஜனநாயக உரிமையை மீறியமைக்காக நாம் மேற்கொள்ளும் அடையாளப் புறக்கணிப்பு போன்று புறக்கணிப்புக்கள் தோன்ற வழியேற்படும்.

எனவே பாடசாலை மாணவர்களை விடுவிப்பதே இவ்வாறான புறக்கணிப்புக்களை தடுப்பதற்கான ஓரே வழி என்பதை உணர வேண்டுகின்றோம் - என்று உள்ளது.

(அ)

# மாணவர்களை விடுவிக்கக் கோருகின்றனர் யாழ்.இந்து அதிபர், ஆசிரியர்கள்

யாழ்ப்பாணம்,மே 9

கடந்த 4ஆம் திகதி இனங்காண முடியாத ஆயுததாரிகளால் அழைத்துச் செல்லப்பட்ட யாழ்.இந்துக் கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவர்கள் இருவரையும் விடுவிக்குமாறு கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உயர்தர வகுப்பு கணிதப் பிரிவு மாணவன் சுந்தரலிங்கம் யசோதரன், கலைப் பிரிவு மாணவன் நாகராசா வேணுகாணன் ஆகியோரை விடுவித்து கல்லூரிச் செயற்பாடுகள் சுமூகமாக நடைபெற அனைவரையும் ஒத்துழைப்பு வழங்குமாறு அதிபர் மற்றும் 79 ஆசிரியர்களும் ஒப்பமிட்டு கோரிக்கை விடுத்துள்ளனர்.

### பழைய மாணவர் சங்கம்

இதே போன்று கல்லூரியின் பழைய மாணவர் சங்கமும் மாணவர்கள் இருவரையும் விடுவிக்குமாறு கேட்டுள்ளது.

யாழ்.மக்களின் அருஞ்சொத்து கல்வி. மாணவர்களின் நலன் கருதி, இனங்காணப்படாத ஆயுத தாரிகளினால் கடத்தப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்களான சுந்தரலிங்கம் யசோதரன், நாகராசா வேணுகாணன் இருவரையும் விடுதலை செய்து மாணவர்கள் சுதந்திரமாகவும் பயமின்றியும் கல்வியினைத் தொடர வாய்ப்பு அளிக்குமாறு சம்பந்தப்பட்ட சகலரையும் மிக உருக்கமாகவும் பணிவுடனும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கேட்டுக்கொள்கின்றது - என்றுள்ளது.

# உயிர் அச்சுறுத்தலால் சரண் அடைந்தவர்களை விடுவிக்க யாழ்.நீதிமன்றம் அனுமதி மறுப்பு

## புனர்வாழ்வு ஆணையாளரின் அனுமதி தேவை

யாழ்ப்பாணம்,மே 9

குடாநாட்டில் உயிர் அச்சுறுத்தல் காரணமாக சரண் அடைந்து நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிக்க யாழ்.நீதிமன்றம் நேற்று அனுமதி மறுத்துள்ளது.

புனர்வாழ்வுத் திணைக்கள ஆணையாளர் கம்லத்தின் அனுமதியுடன் மட்டுமே அவர்களை விடுவிக்க முடியும் என்று நீதிமன்றம் தெரிவித்தது.

உயிர் அச்சுறுத்தல் காரணமாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சரண் அடைந்த எழுபத்தைந்துக்கும் மேற்பட்டவர்கள் யாழ்.பொலிஸார் ஊடாக யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் யாழ்.சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் நேற்று யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

அவர்களில் 20 பேர் தம்மை விடுவிக்குமாறு நீதிவானிடம் கோரினர்.

புனர்வாழ்வுக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை அவசரகாலச் சட்ட விதிகளின் பிரகாரம் புனர்வாழ்வுத் திணைக்கள ஆணையாளரின் அனுமதியுடனேயே விடுவிக்க முடியும் என்று நீதிவான் தெரிவித்தார்.

சட்டத்தரணிகள் சங்கம் மூலம் ஆணையாளருடன் தொடர்புகொண்டு, அனுமதி பெற்றால் நீதிமன்றம் சம்பந்தப்பட்டவர்களை விடுவிக்க முடியும் என்று நீதிவான் தெரிவித்தார். (அ-1)

# வடமராட்சியில் விரைவில் பால் பதனிடும் தொழிற்சாலை

கரவெட்டி, மே 9

வடமராட்சியில் பால் பதனிடும் தொழிற்சாலை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வடமராட்சி பருத்தித்துறை கால்நடை வைத்தியசாலைப் பிரிவினரால் பால் பதனிடும் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படவுள்ளதாக மேற்படி கால்நடை வைத்தியசாலை அதிகாரி சி.வசீகரன் தெரிவித்தார்.

இந்த பால் பதனிடும் நிலையத்தில் பால் உற்பத்தியும் பால் உணவுப்பொருள் விற்பனையும் நடைபெறவுள்ளன.

ஜோக்கட், ஐஸ்கிறீம், தயிர் போன்ற பொருள்கள் இந்நிலையத்தில் உற்பத்தி செய்யப்படவிருக்கின்றன. இத்தொழிற்சாலைக்கான ஊழியர்களுக்கு தற்போது பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று வருவதாகவும் அவை பூர்த்தியானதும் பால் பதனிடும் தொழிற்சாலை திறக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (1-70)

# தென்மராட்சியில் வீசிய சூறாவளியினால் மொத்தம் 114 வீடுகள் பலத்த சேதம்

யாழ்ப்பாணம், மே 9

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த வாரத்தில் வீசிய மினி சூறாவளியினால் 114 வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன. இருபதுக்கும் மேற்பட்ட ஏக்கர் காணிகளில் வாழை மரங்கள் அழிந்தன. ஆறு பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்.

பிரதேசத்தில் உள்ள 15 கிராம அலுவலர் பிரிவுகளில் இப்பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாக பிரதேச செயலகப் புள்ளி விவரங்கள் தெரிவித்திருக்கின்றன.

கைதடி தெற்கு, கைதடி தென்கிழக்கு, நாவற்குழி மேற்கு, நாவற்குழி கிழக்கு, கோயிலாக்கண்டி, கைதடி நுணாவில், கோயிற்குடியிருப்பு, மட்டுவில் வடக்கு, மீசாலை வடக்கு, மீசாலை மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் வீடுகள் சேதமடைந்தன.

கைதடி வடக்கு, கைதடி மத்தி, கைதடி மேற்கு, தென்மட்டுவில், மட்டுவில் நுணாவில், சரசாலை வடக்கு, மீசாலை வடக்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் வாழைத் தோட்டங்கள் அதிக அளவில் அழிந்துள்ளன.

மீசாலை மேற்குப் பிரிவில் நான்கு, பேரும் தென் மட்டுவில் பிரிவில் இரு [illegible]டைந்ததாக புள்ளிவிவரங்[illegible] தெரிவிக்கின்றன. (அ-207)

### நாளை

| | |
|---|---|
| சித்திரை - 27 | வியாழக்கிழமை 10.05.2007 |
| திதி: அட்டமி | மாலை : 05.05 |
| நட்சத்திரம்: | அவிட்டம் பின்னிரவு : 02.05 |
| சுபநேரம் | 07.[illegible] - 08.54 |
| ராகுகாலம் | 01.24 - 02.54 |

# மணல்சேனையில் இளைஞர் சுட்டுக் கொலை

கொழும்பு, மே 9

திருகோணமலை - மூதூரிலுள்ள மணல் சேனைப் பகுதியில் தமிழ் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்டவர் எஸ்.சசிதரன் (வயது-29) என அடையாளம் காணப்பட்டிருக்கின்றார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 8.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது. வெள்ளை வானில் வந்த ஆயுதம் தாங்கிய குழுவினர், குறிப்பிட்ட இளைஞனின் வீட்டுக்குச் சென்று வெளியே அழைத்து சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணையை மூதூர்ப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (சி)

# 'மவ்பிம' நிறுவன நிதிப் பணிப்பாளருக்குப் பிணை

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த 'மவ்பிம' பத்திரிகையின் நிதிப் பணிப்பாளர் துஷ்யந்த பஸநாயக்கவை பிணையில் விடுவிக்கும்படி கொழும்பு மஜிஸ்திரேட் சரோஜினி குசலா வீரவர்தன பயங்கரவாத ஒழிப்பு விசாரணைக் குழுவுக்கு உத்தரவிட்டார்.

பாதுகாப்புச் செயலாளரின் உத்தரவின் பேரில் கடந்த பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி பயங்கரவாத விசாரணைக் குழு துஷ்யந்த பஸ்நாயக்கவை விசாரணைக்காக கைது செய்தது. தொடர்ந்து 70 நாள்கள் அவர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

இதற்கு சில தினங்களுக்கு முன்னர் 'மவ்பிம' பத்திரிகையின் செய்தியாளர் முனுசாமி பரமேஷ்வரியை நீதிமன்ற உத்தரவொன்றின் பெயரில் பயங்கரவாத விசாரணைக்குழு தடுப்புக் காவலில் வைத்து பின்னர் விடுவித்தமை தெரிந்ததே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மஹிந்த சகோதரர்கள் கொடுத்த பணத்தில்தான் ஆஸ்திரேலியாவில் புலிகள் ஆயுதம் வாங்கினர்

## அதற்கு ஐ.தே.கட்சியிடம் ஆதாரம் இருக்கிறதாம்

கொழும்பு, மே 09

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது சகோதரர்களான கோட்டாபய ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ ஆகியோர் கொடுத்த பணத்தைக் கொண்டே புலிகள் அவுஸ்திரேலியாவில் வெடி பொருள்களையும் ஆயுதங்களையும் கொள்வனவு செய்து வருகிறார்கள் என்று ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல குற்றம் சுமத்தினார். அதற்கு தம்மிடம் ஆதாரங்கள் இருக்கின்றன என்றும் அவர் சொன்னார்.

நேற்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆஸ்திரேலியாவில் புலி உறுப்பினர்கள் இருவர் ஆயுதங்களை கொள்வனவு செய்து வன்னிக்கு அனுப்பும் நடவடிக்கையில் ஈடுபட்ட வேளை அவுஸ்திரேலிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு எதிராக வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த ஆயுதக் கொள்வனவிற்கு புலிகளுக்கு பணம் வழங்குவது யார் என்று பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

பஸில் ராஜபக்ஷவும் தானும் சென்றே புலிகளுடன் பேச்சு நடத்தினர் என சிறிபதி சூரியாராய்ச்சி கூறியிருந்தார். அதன் போது பஸில் ராஜபக்ஷ தேர்தலில் வெற்றி பெறுவதற்கு புலிகள் உதவவேண்டும் என்று கேட்டுகொண்டு தேர்தலுக்கு முன்னர் 20 கோடி ரூபாவை புலிகளுக்கு முற்பணமாகக் கொடுத்தார்.

தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் அந்த விடயத்தை மறைக்க ஏற்கனவே ஒப்புக் கொண்டபடி மிகுதி 80 கோடி ரூபாவும் புலிகளுக்குக் கொடுக்கப்பட்டதாக சிறிபதி சூரியாராய்ச்சி ஏப்ரல் மாதம் நான்காம் திகதி நாடாளுமன்றக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றே ஆகவேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவர்களது சகோதரர்களான கோட்டாபய ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ ஆகியோரும் புலிகளுக்குக் கொடுத்த பணத்தினால் இப்போது அவர்களிடம் இருந்தே அடி வாங்குகின்றனர்.

புலிகளுக்கு இப்படியான ஆயுதக் கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு பணம் வழங்குவது யார்? என்பது இங்கு பெரும் சர்ச்சையாகவே உள்ளது.

சிறிபதி சூரியாராய்ச்சி கூறியது போல புலிகளுக்கும் அரசிற்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட இரகசிய ஒப்பந்தம் குறித்து ஆராய நாடாளுமன்றத் தெரிவுக் குழுவொன்றை அமைக்க வேண்டும் என்று சிறிபதியுடன் இணைந்து ஐ.தே.கட்சியும் கோரிக்கை விடுக்கிறது.

அப்படி ஒரு தேர்வுக் குழுவை அமைத்து அந்தக் குற்றச்சாட்டை பொய் என்று நிரூபிக்காமல் தெரிவுக் குழு அமைக்கும் விடயம் குறித்து அரசு அக்கறை செலுத்தாமல் இருக்கிறது. இதற்கு என்ன காரணம்? இதை இப்படியே நாம் விட முடியாது என்றார். (சி)



பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் இலங்கை விவகாரம் தொடர்பாக இடம்பெற்ற விசேட விவாதத்தைக்கண்டித்து, கொழும் பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்திற்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. தேசாபிமான பிக்குகள் முன்னணியைச் சேர்ந்தோர் இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர். தூதரகத்துக்குள் ஆர்ப்பாட்டக்காரர் நுழைய விடாது பொலிஸார் தடுப்புக்களை போட்டிருப்பதை படத்தில் காணலாம்.

# மன்னார் குறிசுட்டகுளம் பகுதியில் இராணுவம் முன்நகர்வு முயற்சி

## எதிர்ச்சமரில் 2 போராளிகள் சாவு

மன்னார், மே 9

மன்னார் குறிசுட்டகுளம் பகுதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் நேக்கி நேற்று பிற்பகல் 2 மணியளவில் படையினர் முன்நகர்வு முயற்சியை மேற்கொண்டனர்.

இம்முன்நகர்வுக்கு எதிராக விடுதலைப் புலிகள் நடத்திய முறியடிப்புத் தாக்குதலில் படையினர் தமது நிலைகளுக்கு பின்வாங்கிச் சென்றனர்.

முறியடிப்புத் தாக்குதலில் போராளிகள் இருவர் சாவடைந்துள்ளனர். கொல்லப்பட்ட படைத்தரப்பைச் சேர்ந்த ஒருவரின் சடலத்தையும் ஏ.கே. எல்.எம்.ஜி. துப்பாக்கி -1, ரி-56 2 ரக துப்பாக்கிகள் - 2, 40 மில்லிமீற்றர் குண்டு செலுத்தி -1 ஆகியன உட்பட படையினரின் தளபாடங்களையும் தாங்கள் கைப்பற்றினர் என விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். (சி)

# பிறிமா மீது வழக்குத் தாக்கல்

கொழும்பு, மே 09

கோதுமை மாவின் விலையை அரசின் அனுமதியின்றி ஒரு தலைப்பட்சமாக 41 ரூபாவாக அதிகரித்தமை தவறானது எனத் தெரிவித்து பிறிமா நிறுவனத்துக்கு எதிராக நுகர்வோர் விவகார அமைச்சு கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றில் நேற்று வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தது.

பிறிமா நிறுவனத்துக்கும், நிறுவனப் பணிப்பாளர் சபைக்கும் எதிராக இ... வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (சி)

## இலங்கைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களில் எவரேனும் இதுபற்றிப் பேசவில்லை. இந்த ஆயுதங்கள் தமிழர்களைக் கொல்வதற்காகப் பயன்படுத்தப்படும் என்பதற்காகவே இவர்கள் இதுபற்றிப் பேசவில்லை.

உண்மையில் தமிழர்களின் இறைமைதான் இந்த சிங்கள அரசால் மீறப்பட்டுள்ளது. தமிழ்த்தரப்பு அமைதியை வேண்டி பல ஒப்பந்தங்களை சிங்களத் தலைவர்களுடன் செய்தது. அத்தனை ஒப்பந்தங்களையும் சிங்களத் தலைவர்களே கிழித்தெறிந்தனர்.

**நிபுணர் குழுவின் அறிக்கை நிராகரிப்பு**

அமைதி முயற்சியின் ஒரு கட்டமாக தீர்வுத்திட்டத்தைத் தயாரிக்க அரசு ஒரு நிபுணர்கள் குழுவை அமைத்தது. அந்தக் குழு ஆராய்ந்து முன்வைத்த தீர்வு யோசனையை அரசு நிராகரித்துள்ளது.

இப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி புதிய யோசனையை முன்வைத்துள்ளது. அது பரிசீலனைக்குக் கூட தகுதியில்லாதது. தமிழர்களுக்கு சிங்களத் தலைவர்கள் எதனையும் தரமாட்டார்கள் என்பது உறுதியாகிறது.

இந்த நாட்டில் மனித உரிமை மீறல்கள் என்றும்இல்லாதவாறுஅதிகரித்துள்ளன. அதைப் பற்றி சர்வதேச நாடுகள் கேட்டால் சிங்கள அரசியல்வாதிகளுக்குக் கோபம் வருகிறது.

அவர்கள் இன்னும் சிங்கள மேலாண்மையுடன் தாமே இந்த நாட்டை ஆள வேண்டும் என்று முற்படுவதே இதற்குக் காரணம். இந்த மனநிலையில் இருந்து சிங்களத் தலைவர்கள் விடுபடவேண்டும். இல்லையேல் பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

**அரசு தமிழர்களை அழித்துக் கொண்டிருக்கிறது**

நாம் சிங்களவருடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று முயற்சித்த போதும் அரசு அதனைக் குழப்பி தமிழர்களை அழித்துக்கொண்டிருக்கிறது.

50 களில் இருந்து தமிழர்கள் அரசின் உதவியுடன் கொன்று குவிக்கப்பட்டனர். இன்று தமிழ் மக்களை பட்டினியால் கொலை செய்கிறது இந்த அரசு.

'இதன் மாற்றமாகவே தமிழர்களின் போராட்டங்கள் தொடங்கின. 'சொட்கண்ணுடனும்', கைத்துப்பாக்கியுடன் தொடங்கிய இப்போராட்டம் கடற்படை, தரைப்படை, 10 விமானங்கள் கொண்ட விமானப்படை ஆகியவற்றை உள்ளடக்கி விரிவடைந்துள்ளது - பலமடைந்துள்ளது.

**இந்த நிலைக்கு அரசுதான் காரணம்**

தமிழர்களின் நியாயமான போராட்டத்தை அரசு அப்போதே விளங்கியிருந்தால் பிரச்சினையை அப்போதே தீர்த்திருக்கலாம்.

தமிழர்கள் இந்தப் பிரச்சினைகளை அனுபவிக்க பிரிட்டனே முக்கிய காரணம். இப்போதாவது பிரிட்டன் இலங்கை அரசின் மீது கவனம் செலுத்துவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

தமிழர்களின் பிரச்சினைக்குத் ஈடான தீர்வுத் திட்டத்தை அரசு முன்வைக்காவிட்டால் தமிழீழமே தீர்வாக அமையும். அதை யாராலும் தடுக்க முடியாது - என்றார்.

## அம்பாந்தோட்டையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றினையடுத்தே இந்தக் குண்டை தாம் மீட்டனர் என ஹம்பாந்தோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

30 அடி நீளமான குழாய் ஒன்றில் வெடி பொருள்கள் நிரப்பப்பட்டு இந்தக் குண்டு தயாரிக்கப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

குண்டு செயலிழக்கச்செய்யும் பொலிஸ் பிரிவினர் உடனடியாக வந்து இந்தக் குண்டை செயலிழக்க வைத்தனர் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட வீட்டில் இருந்தவர்களிடையே ஏற்பட்ட தனிப்பட்ட பகை காரணமாகவே இந்தக்குண்டு வைக்கப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (சி)

## பிரிட்டனின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டைப் பிரித்துப் புலிகளுக்கு கொடுக்கும் சதித்திட்டம்.

பிரிட்டனின் இந்தத் தீர்மானத்தை எம்மால் ஏற்க முடியாது. இலங்கையை மீண்டும் காலனித்துவ நாடாக்க பிரிட்டன் முயற் சிக்கிறது.

எமது நாட்டில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறவில்லை என்று நாம் சொல்லவில்லை. அதை இல்லாது செய்வதற்கு எமது நாட்டில் மனித உரிமை அமைப்பினர், ஜனநாயகவாதிகள் ஆகியோர் உள்ளனர்.

மனித உரிமை மீறலை இல்லாது செய்வதற்கு நாம் முயற்சி செய்கின்றவேளையில்தான் பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகள் அதைக் குழப்புகின்றன.

இங்கு மனித உரிமை மீறல்கள் இடம் பெறுவதற்கும் இந்த நாடுகள்தான் காரணம். பிள்ளையைக் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுகின்றனர்.

இவ்வாறு விமல் வீரவன்ஸ தெரிவித்தார். (சி)

## வெளிநாடுகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தவகையில்அனைத்துநடவடிக்கைகள்மூலமும்பயங்கரவாதத்தை தோற்கடிக்க சிறந்த அடித்தளத்தை நாம் இட் டுள்ளோம்.

**நாட்டுக்குள்ளேயே விமர்சனம் செய்யவேண்டும்**

நாட்டில் பிரச்சினை குறித்து விமர்சன ரீதியாக நாட்டுக்குள்ளேயே ஆராயப்பட வேண்டும். அவ்வாறின்றி இனத்தை காட்டிக் கொடுக்கும் வகையில் எவரும் விமர் சிக்கவேண்டாம்.

பயங்கரவாதிகளுக்குஎதிராகமுறையானதிட்டத்தின்கீழ் போராடும் இத்தருணத்தில், அரசியல் இலாபம் கருதி நாட்டு மக்களுக்கு துரோகம் இழைக்கவேண்டாம் என்று நான் அரசியல்வாதிகளிடம் கேட் டுக்கொள்கிறேன்.

நாட்டில் இருந்து பயங்கரவாதத்தை ஒழிப்பது எனது பொறுப்பும் கடமையும் ஆகும்.

பயங்கரவாதம் காரணமாக நாட்டில் உள்ள பெற்றோர்களும் பிள்ளைகளும் நிம் மதியை இழந்துள்ளனர்.

இரவு வேளையானதும் எல்லோரும் ஆகாயத்தை அண்ணார்ந்து பார்த்த வண்ணம் உள்ளனர். வீட்டில் உள்ள காற்றாடி வீசும் சத்தத்தைக் கேட்டாலும் அதனையும்விமானம்வருவதாகக்கருதவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இத்தகைய நிலையைப் போக்குவது அவசியம் - என்றார் ஜனாதிபதி. (அ-சி)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் கந்தசாமி

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வட்டக்கச்சி மாவடியைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கந்தசாமி 06.05.2007 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-முத்தம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நல்லதம்பி (அப்பச்சியார்) - சின்னம்மா தம்பதியரின் மருமகனும் பாக்கியலட்சுமியின் (வரதா) அன்புக் கணவரும் பிரசன்னா, கஜப்பிரியா ஆகியோரின் அன்புத் தந்தையும் குணலிங்கம், சண்முகநாதன், கோமளராணி, ஜெயராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2007) புதன் கிழமை முற்பகல் 11 மணியளவில் வட்டக்கச்சியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந.பத்மநாதன்
(மைத்துனர்).

3ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.


## ஒத்துமாறல்

வவுனியா வடக்கு வலய ஆரம்பக் கல்வி ஆசிரியர், யாழ்ப்பாணம்/ வலிகாமம் வலயத்திற்கு ஒத்துமாற விரும்புகின்றார்.

தொடர்புகளுக்கு: 077 6624419, 0777 111459, 021 222 5567

## தேவை

திருநெல்வேலியில் உள்ள எமது நிறுவனத்துக்கு ஆண் பணியாளர்கள் தேவை.

தொடர்பு: 021 222 2478
077 9550496

IDM

COMPUTER STUDIES ISLAND WIDE (PVT) LTD.
Affiliated University College
Nation's ICT Acadamy - (Jaffna Branch)
216, Navalar Road, Jaffna. Web: www.idm.edu, www.idm.lk

அரசினால் அங்கீகரிக்கப்பட்ட கணனி நிறுவனம்

புதிய பிரிவுகள் ஆரம்பம் Weekend 12.05.2007
Weekday 14.05.2007

| Degree Courses | Diploma Courses |
| --- | --- |
| * NCC- UK | # Dip. in ICT |
| * HND- UK | # Dip. in DTP |
| * BIT- COLOMBO | # Dip. in BM |
| * BCS- UK | # Dip. in Hardware |
| | # Dip. in MS. Office |

Certificate Courses

| International | |
| --- | --- |
| MCP (USA) | VB.Net |
| | Java |
| MCSA (USA) | C++ |
| | VB |
| | Internet & E-Mail |
| MCSE (USA) | Web Designing |

ஆண்டு 10, 11 மாணவர்களுக்கு ICT வகுப்புகளும் A/L மாணவர்களுக்கு GIT வகுப்புகளும் ஆரம்பிக்க உள்ளன.

மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும் Tel: 021-4591398


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.05.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org